P'RAYA
87 RUE DE ...
... FRANCE

அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 17-12-1993

உள்ளே...


- தமிழீழத் தேசியத்தலைவரின் மாவீரர் நாள் செய்தியின் முழுவிபரம்.
- பூநகரி கூட்டுப்படைத்தளம் மீது புலிகள் வீசச்செய்த புயல்
- பூநகரிப் படைத்தளம் தகர்ப்பு.தமிழீழப் போரில் புதிய பரிணாமம்.
- 'போர் உலா' - பகுதி 1 (கப்டன் மலரவனின் பயணக் கட்டுரை)
- சிறுகதை - "தொடர்கதை"
- தென்னாபிரிக்கா,இன ஒதுக்கலுக்கு இறுதியாக சமாதி எழுதப்பட்டது.


# போருக்கான ஆயத்தங்களில் சிறீலங்கா தீவிர கவனம்

## மாரிகாலம் முடிந்ததும் தாக்குவதற்குத் திட்டம் !

அடுத்தடுத்து இராணுவத் தோல்விகளைத் தழுவியபோதிலும் சிறீலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வு மூலம் தமிழ் மக்களை அழித்துக் கட்டுவதிலேயே அக்கறை காட்டி வருகின்றது. சிறீலங்கா தனது கடலாக்கிரமிப்பை வலுப்படுத்தவென மூவாயிரத்து அறுநூறு இலட்சம் ரூபா பெறுமதியான அதிவேகத் தாக்குதல் படகொன்றை பிரான்ஸ் சீமன்ஸ் மரைன் நிறுவனத்திடமிருந்து அவசர அவசரமாக இறக்குமதி செய்துள்ளது. இவ் அதிவேகத் தாக்குதல் படகுகள் நான்கினைக் கொள்வனவு செய்வதற்கென நூற்றி நாற்பத்து நான்கு கோடி ரூபாய்க்களை சிறீலங்கா அரசாங்கம் பிரான்ஸ் நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. அதில், ஒரு அதிவேகத் தாக்குதல் படகே கொழும்பை வந்தடைந்துள்ளது. மிகுதி மூன்று அதிவேகத் தாக்குதல் படகுகளையும் தை மாத இறுதிக்குள் வழங்கும்படி சிறீலங்கா அரசாங்கம் பிரான்ஸ் நிறுவனத்தைப் பணித்துள்ளது.

### தையில் 200 கோடிக்கு ஆயுதம்

இதற்கிடையில், தை மாதம் முடிவதற்குள் இரு நூறு கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை இறுக்குமதி செய்வதற்கான இறுதி ஏற்பாடுகளைச் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு பூர்த்தி செய்துள்ளதாகத் தெரிகிறது. அத்துடன், சிறீலங்காப் படைகள் தாம் வான் தாக்குதல் மூலமே தமிழீழப் பிரதேசத்தில் நிலை கொண்டிருக்கக் கூடிய ஒரே சாத்தியக்கூறு இருந்து வருகின்றது எனவும், ஆயினும் விடுதலைப் புலிகளால் பூநகரி - நாகதேவன்துறை இராணுவக் கடற்படை முகாம் வீழ்ச்சிகளின் போது கைப்பற்றப்பட்ட 120 மி.மீ பீரங்கிகள், விமானப்படையின் வான் நடமாட்டத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதால், அதியுயரத்தில் பறக்கக்கூடிய நவீன விமானங்களை சிறீலங்கா விமானப்படைக்கு வாங்கும்படி சிறீலங்கா அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதனை ஏற்றுக் கொண்ட சிறீலங்கா அரசாங்கம் அதிநவீன விமானங்களை வாங்குவதற்கான சர்வதேச கேள்வியை வர்த்தமானிப்படுத்தியுள்ளது.

### கடலில் ஓடும் டாங்கிகள்

பூநகரி நாகதேவன் தளப் போரின்போது T -55 ரக செக்கோஸ்லாவிய டாங்கிகளைக் கரையிறக்க முடியாதவாறு விடுதலைப் புலிகளின் டாங்கி எதிர்ப்பு அணியினர் வெற்றிகரமாகத் தடுத்ததன் எதிரொலியாக நிலத்திலும் நீரிலும் ஓடக் கூடிய நவீன டாங்கிகளை உடனடியாகக் கொள்வனவு செய்வதென சிறீலங்கா அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

### இராணுவ அமைப்பே மாற்றப்படுகிறது

ஆயுத பலத்தை அதிகரிக்கவும் நவீனப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுத்துவரும் சிறீலங்கா அரசாங்கம், தனது இராணுவத்தின் கட்டமைப்பையே மாற்றி புதியதொரு அமைப்பின் கீழ் தாக்குதலைத் தொடர முயன்று வருகின்றது. தனது உயர்மட்ட அதிகாரிகளிடையே ஒருமித்த கருத்தும் அணுகுமுறையும் இல்லாததினாலேயே தமிழீழ ஆக்கிரமிப்பைத் திட்டமிட்டபடி நடத்த முடியாதிருப்பதாக சிறீலங்கா அரசாங்கம் கருதுவதாகத் தெரியவருகிறது. இதனை ஈடுசெய்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# மௌன ஊர்வலத்திற்குப் பதில் மீண்டும் குண்டு வீச்சு

★ 50 க்கு மேல் பொதுமக்கள் பலி

★ யுத்தசூனியப் பிரதேசத்தில் 10 பேர் காயம்

★ இலட்சக்கணக்கான சொத்துக்கள் நாசம்

சென். ஜேம்ஸ் தேவாலயத்தை அடுத்துள்ள குருநகர்ப் பிரதேசத்தின் மீதும், பாசையூர்ப் பகுதியில் மக்கள் அடர்த்தியாக வாழும் பிரதேசங்களின் மீதும் மார்கழி ஐந்தாம் திகதி சிறீலங்கா விமானப்படை மீண்டும் பயங்கர குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின. இதனால் இப்பிரதேசத்தில் 26 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 71 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

இதற்கு முன்னர் சென். ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது, சிறீலங்கா விமானப்படையினர் நவம்பர் 13ம் திகதி குண்டு வீசி 132 வருடப் பழமை வாய்ந்த தேவாலயத்தைச் சிதைத்ததுமல்லாமல், இத்தேவாலயத்தினுள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 16 பேரை

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# "தோல்வி இராணுவத்திற்கே"

## -சிறீலங்கா இராணுவத்தளபதி

தமிழீழ ஆக்கிரமிப்பு யுத்தத்தில் இராணுவ ரீதியாகக் கூட வெல்லமுடியாத நிலை உண்டு என்பதை சிறீலங்காவின் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன வெளிப்படையாக ஏற்றுக் கொண்டுள்ளார்.

"தோல்வி காணும் இராணுவப் படையின் தளபதியாக நான் இருக்க விரும்பவில்லை" என சிறீலங்காவின் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன பகிரங்கமாகக் கூறியுள்ளமை, சிறீலங்கா அரசாங்கத்தின் ஆற்றலின்மையையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையையும் உலகிற்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. ஒரு இலட்சம் ஆளணியினையும், கடற்படை, விமானப்படை, பொலிஸ்படைத் துணைகளையும் கொண்டிருக்கும் பெரும் இராணுவமானது, விடுதலை வேட்கையையும் தன்னலமற்ற தியாக உணர்வையும் கொண்டிருக்கும் தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அடைந்துவரும் அவமானகரமான தோல்விகளை சிறீலங்கா இராணுவத் தளபதியின் கூற்று வெளிப்படையாக்கியுள்ளது.

### 10, 083 இராணுவத்தினர் தலைமறைவு

இதற்கிடையில், சிறீலங்கா இராணுவத் தலைமையகம் விடுத்த அறிக்கை பத்தாயிரத்து எண்பத்து மூன்று இராணுவத்தினர் தமிழீழ ஆக்கிரமிப்பு யுத்தத்தில் தலைமறைவாகியுள்ளனர் என ஏற்றுக்கொண்டுள்ளது. இவர்களில் முந்நூற்று அறுபத்தாறு பேர் சிறீலங்கா இராணுவத்தின் அதிகாரிகள் எனவும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது. அவ்வறிக்கை, சிறீலங்கா இராணுவத்திடை ஏற்பட்டுவரும் நம்பிக்கையீனத்தையும், உறுதியின்மையையும் வெளிக்காட்டி நிற்கிறது. ■




லண்டனில் நடைபெற்ற மாவீரர் நாள் நினைவு நிகழ்ச்சியில் தமிழீழப் பாடல்களை வயலின் கருவியில் வாசிக்கும் ஐரோப்பிய பெண்மணியான செல்வி சூ. ஜெரமி.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**



# திணிப்பா ? தீர்வா ?

தமிழீழப் பிரதேசத்தின் மீது நடாத்தப்படும் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புதுவிதமான நியாயப்படுத்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார். "புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தும் அவர்கள் தரப்பிலிருந்து பதில் இல்லை. ஆகவே, வட -கிழக்கில் பயங்கரவாதத்தை முறியடித்து, அங்கு சிவில் நிர்வாகத்தை மேற்கொள்வதற்காக பொலிசாரும் முப்படையினரும் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்" என்பதே சிறீலங்காப் பிரதமரின் விளக்கம்.

ஆனால், அதே சிறீலங்காப் பிரதமர், "வட கிழக்கு தொடர்ந்து இணைந்திருப்பதா? அல்லது அதைப் பிரிப்பதா என்பதும், மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதா என்பது பற்றியதே பேச்சுவார்த்தைக்குரிய பிரதான அம்சங்கள்" எனத் தெளிவாகக் கூறுகிறார். இதை மிகக் கூர்மையாக அவதானித்தால், சிறீலங்கா அரசாங்கம் தமிழர்கள் மேல் தாம் விரும்பிய தீர்வைத் திணிக்க விரும்புகிறது. இந்தத் திணிப்புக்குப் பெயர்தான் பேச்சுவார்த்தை. இத்திணிப்பைத்தான் தீர்வு என, சிறீலங்கா அரசு கூறிவருகிறது.

அதேவேளை, சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்னுமொரு உண்மையையும் வெளியிட்டுள்ளார். சிறீலங்கா அரசாங்கம் ஏன் வடக்கு -கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்ட முயல்கிறது என்பதே அது. "நாம் மிக அவசரமாகவே வடக்கு -கிழக்கில் சமாதானத்தை நிலைநாட்ட முயல்கிறோம். இதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. நாட்டின் ஒருமைப்பாட்டை (அதாவது ஒற்றையாட்சி அமைப்பை) நிலைநாட்ட வேண்டும்.
2. அரசியல் ரீதியில் எல். ரி. ரி. ஈ. அமைப்பின் பலத்தைக் குறைக்க வேண்டும்.
3. எல். ரி. ரி. ஈயினரின் படைப்பலத்தைக் குறைக்க வேண்டும்"

இதுவே சிறீலங்காப் பிரதமர் வடக்கு -கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த விரும்புவதன் அடிப்படை நோக்கம் என மிக மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அதாவது, சிறீலங்காவின் பௌத்த சிங்களக் குடியரசு என்ற ஒற்றையாட்சி அமைப்பை எவ்விதத்திலேனும் பாதுகாக்க வேண்டும். இதற்குத் தடையாக இருக்கும் தமிழீழ மக்களின், மக்கள் சக்தியான விடுதலைப் புலிகளை நிர்மூலமாக்க வேண்டும். அதையும் இரு தளங்களில் செயல்படுத்த வேண்டும். முதலில் விடுதலைப் புலிகளின் அமைப்பின் பலத்தைக் குறைக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் அமைப்பு எதிலே தங்கி நிற்கிறது? தமிழீழ மக்களிலே! அந்த மக்களை அழித்தால் தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பு பலவீனப்படும். இதற்கு ஒரே வழி வான்வெளிக் குண்டு வீச்சும், கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலும். அதனை முடுக்கிவிட வேண்டும். மறுபுறத்தில் மக்களின் வாழ்வியலைச் சீர்குலைக்கக் கூடிய முறையில் பொருளாதாரத் தடைகளையும் மக்களின் நடமாட்டச் சுதந்திரத்தையும் (கிளாலிக் கடலேரிப் பயணத்தடை) கட்டுப்படுத்த வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், சர்வதேச யுத்த விதிகளுக்குப் புறம்பான வகையில் மக்கள் மேல் முற்றுகை யுத்தத்தையும், இன அழிப்பையும் நடாத்துதல். இதுவே சிறீலங்காவின் எல். ரி.-ரி. ஈயினரின் அமைப்பை பலவீனப்படுத்துதல் என்பதன் நடைமுறை யதார்த்தம்.

அடுத்ததாக, எல். ரி. ரி. ஈ. யினரின் படை பலத்தைக் குறைக்க வேண்டும் என்பது, சிறீலங்கா அரசாங்கத்தின் பகற்கனவு. இதற்காகக் காலத்துக்கு காலம் ஆக்கிரமிப்பு யுத்தங்களையும் எல்லை அத்துமீறல்களையும் செயற்படுத்தல் வேண்டும். இவ்விதம் செயற்படுத்துவதற்கு ஆயுத பலத்தைப் பெருக்குதல், ஆயுதங்களை நவீனப்படுத்துதல், சிறீலங்காப் பாதுகாப்புப் படையின் ஆளணி பலத்தைப் பெருக்குதல் என்பன சிறீலங்கா அரசின் அடிப்படை நோக்கங்களாக உள்ளன.

அது மட்டுமல்ல, முழுக்க முழுக்க இராணுவ அடக்குமுறையை -அரச பயங்கரவாதத்தை வடக்கு -கிழக்குக்கு மேல் கட்டவிழ்த்து விட்டுள்ள சிறீலங்கா, அங்கு நிர்வாக அமைப்பு செயற்படுவது போன்ற ஒரு பொய்யான தோற்றத்தை சர்வதேச சமூகத்திற்கு காட்ட முயலும். இதற்காகவே சிறீலங்காப் பிரதமர், "பொலிசாரையும், முப்படையினரையும்" என்ற சொற்றொடரை தனது பேச்சில் கையாள்கிறார். அவ்வாறே இவ்வளவு காலமும் முன்னாள் இராணுவ அதிகாரியை வடக்கு -கிழக்கு மாகாண சபையின் ஆளுனர் எனக்காட்டி, பொம்மை ஆட்சி நடாத்திய சிறீலங்கா இப்பொழுது லயனல் பெர்னான்டோவை வடக்கு -கிழக்கு மகாணசபையின் ஆளுனராக நியமித்து, அங்கு நிர்வாக அமைப்பு ஏதோ செயற்படுவது போன்ற மாயைத் தோற்றத்தை உலகின் முன் தோற்றுவிக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்கின்றது. நிவாரணப் பணிகளுக்கு -அபிவிருத்திக்கு என்றெல்லாம் வெளிநாட்டு நிதிவளங்களைப் பெற்று அவற்றை தமிழீழ மக்களுக்கு எதிரான யுத்தத்திற்குப் பயன்படுத்துகிறது.

ஏன் சமாதானம்; எது சமாதானத் தீர்வு என்பதை எல்லாம் சிறீலங்காப் பிரதமர் தெளிவாகக் கூறிவிட்டார். ஆகவே நடைமுறையில் சிறீலங்கா என்ன செய்யப் போகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. இதனால்தான் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், "எமது மக்களின் சுதந்திரத்திற்காக நாங்கள் நடாத்தும் போராட்டம் நீதியானது; நியாயமானது" எனத் தெளிவாகக் கூறுகின்றார். "எந்த இலட்சியத்துக்காக மாவீரர்கள் உயிர் தியாகம் செய்தார்களோ, அதே இலட்சியத்துக்காக நாங்கள் தொடர்ந்து போராடுகின்றோம். எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியிலும் எமது இலட்சியத்தைக் கைவிடாமல் எமது போராட்டம் தொடர்கிறது" என உறுதியாகக் கூறுகிறார். "சமாதானக் கதவுகளை நாம் இன்னமும் மூடிவிடவில்லை. சிங்கள இனவாதிகளைப் போல நாங்கள் மூடிவிடவில்லை. இரண்டாம் ஈழப்போரோடு திறக்கப்பட்ட பேச்சு வார்த்தைக் கதவுகள் திறந்தே வைக்கப்பட்டு உள்ளன. ஆனால் எங்கள் மக்கள் மீது அநாவசியத் தாக்குதல்கள் தொடர்ந்து நடாத்தப்படுமானால், நிரந்தரமாகவே சமாதானக் கதவை மூடிவிடுவோம். சிங்கள இனவாத சக்திகளிடம் இருந்து நீதி கிடைக்காது போனால், தமிழீழமே முடிந்த முடிபாகும்" என்று தீர்வைத் தலைவர் பிரபா கூறுகிறார். திணிப்பை சிறீலங்கா நிறுத்துவது ஒன்றே உண்மையான அமைதிக்கு வழிவகுக்கும். ■

# எந்தக் குற்றச்சாட்டையும் நான் கேள்விப்படவில்லை

## -- யாழ் அரசாங்க அதிபர்

"தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களைக் கொடுமைப்படுத்துகிறார்கள் எனத் தெரிவிக்கப்படும் எந்தக் குற்றச்சாட்டையும் நான் கேள்விப்படவில்லை" என யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்துள்ளார்.

"தமிழீழ விடுதலைப் புலிகளால் சில ஒழுங்கு முறைகள் யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறன. மக்களும் அதனைப் பின்பற்றுகிறார்கள். பூநகரி இராணுவத் தளத்தை புலிகள் கைப்பற்றியதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாகவே நவம்பர் 12 இல் குண்டு வீச்சு ஆரம்பமாகியது. அரசாங்க செயலகத்தின் மீது இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. ஒன்று கேற் அருகிலும் மற்றொன்று எனது அலுவலகத்திற்கு அருகிலும் விழுந்து வெடித்தன. எனது மார்பில் காயமேற்பட்டு ஆறு இழைகள் போடப்பட்டன. மயிரிழையில் உயிர் தப்பியுள்ளேன்.

இக்குண்டு வீச்சுக்களின் பின்னர் மக்கள், சிறீலங்கா அரசு தம்மீது பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகிறது என்றே கூறுகின்றனர். பற்றரிகளை (Battery) கொண்டு செல்ல அனுமதிக்காததினால் பலாலி இராணுவ முகாம் ஒலிபரப்பும் அறிவித்தல்களை மக்கள் கேட்க இயலாது. விமானத்திலிருந்து இராணுவம் போடும் துண்டுப் பிரசுரங்கள் பெரும்பாலும் கடலிலேயே விழுகின்றன. இதனால் மக்கள் சிறீலங்கா இராணுவத்தினது உத்தரவு எதையும் அறிய இடமில்லை. அரச பயங்கரவாதத்திற்கு இலக்காகும் நிலையிலுள்ள மக்கள் பாதுகாப்புத் தேடி விடுதலைப் புலிகளையே நாடுகின்றனர்" எனவும் அவர் அப் பேட்டியில் தெரிவித்தார்.

யாழ் செயலகத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சில் காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் (வயது 59)
மாசிலாமணி புவனேந்திரன் (வயது 37) -தொல்புரம் வாசி -செயலக ஊழியர், காலில் படுகாயம் அடைந்தார்.
மு. காசிப்பிள்ளை - (வயது 55) -அரியாலை வாசி -செயலக ஊழியர்
பூபாலசிங்கம் (வயது 45) -கொழும்புத்துறையைச் சேர்ந்தவர் -செயலக ஊழியர்
மாரிமுத்து சீவரத்தினம் - (வயது 50) -கோண்டாவில் வாசி -யாழ் அரச அதிபரின் செயலக உதவியாளர்.
வேலாயுதம் கதிர்காமு (வயது 63) -கைதடி
வைரமுத்து கோபாலபிள்ளை (வயது 54) -கைதடி
வல்லிபுரம் சந்திரன் (வயது 38) -அரியாலை
வேலு பரமசிவம் (வயது 34) -கல்வியங்காடு
தூசை வின்சன்ட் (வயது 55) கச்சேரியடி -படுகாயமடைந்துள்ளார்.
மனுவன் அன்ரனி (வயது 70 ) குருநகர்
சோமசுந்தரம் செல்வராணி (வயது 30) -கச்சேரியடி
சிந்தாமணி இந்துசிகாமணி (வயது 26) -அக்கராயன், கோணாவில்
வேலு கணேஸ் (வயது 27) -முருங்கன்
கனகலிங்கம் கேதீஸ்வரன் (வயது 18) -மட்டுவில்
முருகேசு வசீதரன் (வயது 28) -சாவகச்சேரி
சந்திரகுலசிங்கம் (வயது 27)
நாகேஸ்வரன் (வயது 24)
கேதீசன் (வயது 20)
வர்ணன் (வயது 22)
சந்திரநகுலேஸ் (வயது 27)
மதியழகன் (வயது 21)
மணிவண்ணன் (வயது 19)
வதனன் (வயது 21)
மா. வில்சன் (வயது 20) ■

## 'பௌத்தத்திற்கு துரோகம்?'

# நூலெழுதிய தமிழரைத் தேசத்துரோகியாக பிரகடனப்படுத்துக

## ■ சிறீலங்காப் பாராளுமன்றத்தில் கோரிக்கை

"பௌத்தத்திற்கு துரோகம்?" (Buddhism Betrayed?) என்ற நூலை எழுதிய கர்வார்ட் (Harvard) பல்கலைக்கழக மானிடவியல் பேராசிரியரான எஸ். ஜே. தம்பையாவை தேசத்துரோகியாகப் பிரகடனப்படுத்தி தண்டிக்க வேண்டும்" என சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிக்சன் பெரேரா சிறீலங்காப் பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்லாத்துக்கும் முஸ்லீம்களுக்கும் எதிராக நூல் எழுதிய சல்மான் ருஸ்த்திக்கு ஈரானியத் தலைவர் மரண தண்டனை விதித்தார். அது ஒரு சரியான செயல். அதுபோல பௌத்த சமயத்துக்கு மாசு கற்பிக்கும் விதத்தில் நூல் எழுதியுள்ள தமிழரான தம்பையாவும் சிறீலங்காப் பாராளுமன்றத்தால் தேசத்துரோகியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என டிக்சன் பெரேரா கோரினார்.

சிறீலங்காவில் மதம், அரசியல், வன்முறைகள் என்பதன் ஆய்வாகவே பேராசிரியர் தம்பையா, 'பௌத்தத்திற்குத் துரோகம்?' என்ற நூலை எழுதி 1992 இல் வெளியிட்டார். இதற்கான முன்னுரையை சிங்களவரான லால் ஜெயவர்த்தனா எழுதியுள்ளார். இருந்தபோதிலும், சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத வெறி சிறீலங்காவுக்கு வெளியேயும் கருத்துச் சுதந்திரத்தை மறுக்க வேண்டும் எனும் உணர்வை டிக்சன் பெரேராவின் பேச்சு வெளிப்படுத்துகின்றது. ■

## மட்டக்களப்பில் இருந்து அம்பாறையை

# பிரித்தெடுக்க நடவடிக்கை

மட்டக்களப்பு பிராந்திய இறைவரித் திணைக்கள அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்த அம்பாறை மாவட்ட இறைவரிப் பணிகள், பதுளை பிராந்திய அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது மட்டக்களப்பு அலுவலகத்தில் இருக்கும் அம்பாறை மாவட்ட வரி செலுத்துனர்களின் வருமான வரி, மற்றும் வியாபாரப் புரள்வு வரி ஆகியவற்றிற்கான கோவைகளை, பதுளை அலுவலகத்திற்கு உடனடியாக கையளிக்குமாறு திணைக்கள தலைமையக ஆணையாளர் நாயகம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

1976 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மட்டக்களப்பு பிராந்திய இறைவரித் திணைக்கள அலுவலகத்தின் கீழ் பொலநறுவை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப்பணிகள் கொண்டுவரப்பட்டன எனினும், 1989 ஆம் ஆண்டில் மாகாணசபை அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து, பொலநறுவை மாவட்டப் பணிகள் அநுராதபுர அலுவலகத்திற்கு இடம் மாற்றப்பட்டன. திருகோணமலை மாவட்டப்பணிகள் அநுராதபுரத்திலிருந்து விடுவிக்கப்படும் எனக் கூறப்பட்டபோதும், அது நடைபெறவில்லை. அத்துடன் மட்டக்களப்பில் ஏற்கனவே இயங்கிவந்த தேசிய இளைஞர் சேவை என்ற மாகாண அலுவலகம், நீர்வழங்கல் வடிகால் சபையின் அலுவலகம், நெல் சந்தைப்படுத்தும் சபையின் அலுவலகம் என்பன ஏற்கனவே அம்பாறைக்கு இடம் மாற்றப்பட்டிருப்பதுடன், இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண அலுவலகம் கொழும்பில் இயங்கி வருவதும் தெரிந்ததே. ■

# உற்பத்தி ஊக்குவிப்பிற்கு தரிசுக்காணி விநியோகம்

வவுனியாக் கோட்டத்திலே தரிசாகக் கிடக்கும் காணிகளை, உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்காகப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளில் வவுனியா கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது.

இதன் முன்னோடி நடவடிக்கையாக காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் நோக்குடன், நையினாமடு பிரதேசத்தில் உள்ள தரிசுக்காணிகள், கிராமிய உற்பத்திக் குழுக்களால் இனம் காணப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ■

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

தலைமைச் செயலகம்
தமிழீழம்
27. 11. 93

**எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!**

இன்று மாவீரர் நாள். எமது சுதந்திர இயக்கத்தின் சரித்திர சிற்பிகளான விடுதலை வீரர்களை நாம் நினைவுகூரும் நன்னாள். ஆண்டாண்டு காலமாக அடிமை விலங்கில் முடங்கிக் கிடந்த எமது தாயகத்தை வீறுகொண்டு எரியும் விடுதலைக் களமாக மாற்றிவிட்ட வீரமறவர்களை நாம் நினைவு கொள்ளும் புனித நாள். 'எமது நாடு எமக்கே சொந்தம்' என்ற உரிமைக் குரலை உலகுக்கு முழங்கச் செய்த உன்னத தியாகிகளை நாம் எமது நெஞ்சுப் பசுமையில் நிறுத்திக் கொள்ளும் தேசிய நாள். மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்கதினம் அல்ல. நாம் கண்ணீர் சிந்தி கவலைகொள்ளும் சோகதினம் அல்ல. இன்றைய நாள் ஒரு தேசிய எழுச்சி தினம். எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதிபூணும் புரட்சி தினம். மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வு அல்ல. எமது தேச விடுதலையின் ஆன்மீக அறை கூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கின்றது. எமக்கு ஒரு நாடு வேண்டும், என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள். எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீரசுதந்திர பிரகடனமாகவே சம்பவிக்கின்றது. இந்த நிலத்தின் நெஞ்சில் படுத்துறங்கும் எமது மாவீரர்களின் கல்லறைகளில் இருந்து இந்தச் சுதந்திரப் பிரகடனங்களின் பேரொளி எழுகிறது. ஆறாயிரத்துக்கும் அதிகமான இலட்சிய வேங்கைகளின் சத்திய வாக்காக இந்த விடுதலை முழக்கம் கேட்கிறது. இந்த விடுதலை முழக்கத்தில் எழுச்சிகொண்டே எமது இலட்சியப் பயணம் தொடர்கிறது. இரத்தம் சிந்தும் அரசியலாக எமது போராட்ட வரலாறு நீண்டு செல்கிறது.

எமது விடுதலை இயக்கம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்றுவரை, இந்த நீண்டகால இடைவெளியில் நாம் எத்தனையோ நெருக்குதல்களையும் சோதனைகளையும் ஆபத்துக்களையும் சந்தித்த போதும், எமது அடிப்படையான அரசியல் இலட்சியத்திலிருந்து என்றுமே நாம் தளர்ந்ததும் இல்லை; தடுமாறியதும் இல்லை. தமிழீழ தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு, என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும், தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமல்ல முழு உலகமும் நன்கறியும். தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியரசு அமைப்பதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை எனத் தீர்மானங்கள் நிறைவேற்றி மக்களிடம் மனுப்பெற்ற கட்சிகளும், ஆயுதப்போராட்டம் மூலமே தனியாட்சி நிறுவ முடியுமென ஆர்ப்பரித்த ஆயுதக் குழுக்களும் எப்பொழுதோ தமது அரசியல் குறிக்கோளைக் கைவிட்டு தமிழ் இனத்துக்குத் துரோகம் இழைத்து நிற்கிறார்கள். எமது இயக்கம் மட்டுமே, அன்றிலிருந்து இன்று வரை வரித்துக்கொண்ட குறிக்கோளில் இருந்து வழி தவறியதில்லை. தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாமல் அல்ல. அன்றியும் இந்த இலட்சியத்திற்கு எதிராக எந்தெந்த சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்குத் தெரியாததல்ல. பிராந்திய வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும், உலக வல்லரசுகளின் கேந்திர இலக்குகளும் எத்தகைய இடையூறுகளை ஏற்படுத்தும் என்பதை நாம் எதிர்பாராமல் இருக்கவில்லை. இந்தச் சவால்கள் எழுந்த பொழுதெல்லாம், நாம் அதைத் துணிந்து எதிர்கொள்ளத் தவறவில்லை. அழிவின் விளிம்புக்கு தள்ளப்பட்ட பொழுதும், நாம் எங்கள் கொள்கையைக் கைவிடவில்லை. ஆதிக்க சக்திகளின் ஆவேசப் புயல்களும் எம்மை ஆட்டம் காணச் செய்யவில்லை. தார்மீக அடிப்படையில் நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது. சர்வதேச மனித அறத்துக்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்து விட முடியாது. நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில் நியாயப்பாடு எமது பக்கம் இருக்கும் போது நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதிபூண்டு நிற்க வேண்டும். இலட்சியத்தில் உறுதி பூண்டு இறுதிவரை போராடும் மக்கள்தான், விடுதலையை வெல்கிறார்கள். இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை என்பது எமக்குத் தெரியாததல்ல. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப்படுத்துகின்றது. மக்கள் உரிமை, மனித உரிமை, தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிலைநாட்டுகின்றன. சர்வதேச அரசியலும் சரி, ராஜதந்திர உறவுகளும் சரி இந்த அடிப்படையில் தான் செயற்படுகிறது. இந்த நிலையில், எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை, சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகரித்து விடுமென நாம் எதிர்பார்க்க முடியாது. ஆயினும், நாம் அந்த அங்கீகாரத்திற்காக தொடர்ந்து குரல் எழுப்பி வரவேண்டும். மாறிவரும் உலகில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழும் ஒரு சந்தர்ப்பத்தில், சர்வதேச சூழ்நிலை எமக்கும் சாதகமாக அமையலாம். அப்பொழுது உலகத்தின் மனச்சாட்சி நியாயத்தின் சார்பாக எம்பக்கம் திரும்பும்.

உண்மையில் எமது போராட்டம் உலகத்தின் கைகளில் தங்கியிருக்கவில்லை. எமது வெற்றியானது, எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கின்றது. நீதியும் நியாயமும் எமது பக்கம் இருந்தால் மட்டும் போதாது. நாம் வலிமை மிக்கவர்களாக இருக்க வேண்டும். போராடும் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். எமது எதிரியான சிங்களப் பேரினவாத அரசு எமது மக்களின் பிரச்சினையை நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் தீர்க்க விரும்பவில்லை. பலாத்கார பிரயோகத்தின் அடிப்படையிலேயே தமிழர் பிரச்சினைக்கு முடிவுகட்ட முனைகிறது. சிங்களப் பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற இராணுவப் போக்கு காரணமாக தமிழரின் இனப்பிரச்சினை நாற்பது ஆண்டு காலத்துக்கு மேலாகத் தீர்வின்றி, முடிவின்றி இருக்கின்றது. நீண்ட நெடுங்காலமாக தீர்வு கிடைக்குமென காத்திருந்த தமிழர்கள் சாவையும், அழிவையும், தாங்கொணாத துன்பத்தையும் சந்தித்ததைத் தவிர வேறொன்றும் காணவில்லை. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை வழங்கப் போவதில்லை எனக் காலங்காலமாக நாம் வலியுறுத்தி வந்த அரசியல் உண்மையை எமது மக்கள் இன்று ஆழமாக உணரத் தொடங்கியுள்ளனர். எமது இயக்கம் என்றுமே சமாதானப் பாதைக்கு குறுக்கே நிற்கவில்லை. சிங்கள அரசுக்கு நாம் எத்தனையோ சந்தர்ப்பங்கள் வழங்கினோம். திம்புவில் தொடங்கி கொழும்பு வரை பேச்சுவார்த்தையில் பங்குகொண்டோம். ஆனால் சிங்கள அரசு தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியைக் கைவிட்டு போர்க் களத்தில் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்டது. 1990 ஆம் ஆண்டு யூன் மாதம், இரண்டாவது கட்டமாக தமிழீழப் போர் ஆரம்பமாகிய காலந்தொட்டு எமது விடுதலை இயக்கம் சமாதானத்திற்கான கதவுகளை அகலத் திறந்து வைத்தது. பேச்சுவார்த்தைக்கு இணங்கி நாம் நேசக்கரத்தை நீட்டிய பொழுதெல்லாம், சிங்களப் பேரினவாதம் அதைப் பற்றிக் கொள்ள மறுத்தது. யுத்த நிறுத்தம் செய்து பொருளாதாரத் தடைகளை நீக்கி, சமாதானத்துக்கான சூழ்நிலையை உருவாக்குமாறு நாம் மாறி மாறி விடுத்த கோரிக்கைகளையும் நிராகரித்தது. சமாதானத்துக்குப் பதிலாக யுத்தத்தையும் அமைதிக்குப் பதிலாக அழிவையும் பேரினவாத அரசு எமது மக்கள் மீது கட்டவிழ்த்துவிட்டது. இறுதியில் தமிழரின் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாதம் எனச் சித்தரித்துக் காட்ட முனைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இனப்பிரச்சினை இல்லவே இல்லையென பகிரங்கமாகவே பிரகடனம் செய்துள்ளது.

இராணுவப் பலத்தைக் கொண்டு தமிழரின் சுதந்திர இயக்கத்தை அழித்துவிடலாம் என்ற இறுமாப்பில் சிங்கள ஆளும் வர்க்கம், சமாதானத்திற்கான கதவுகளை இறுக்கச் சாத்திவிட்டது. தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து தமிழரை அடக்கியொடுக்கி ஆளவேண்டும் என்ற குறிக்கோள் முன்பிருந்ததைவிட தீவிரப் போக்கை எடுத்தது. இந்த இராணுவவாத கடும்போக்கின் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணக் குடாநாடு மீது படையெடுப்புக்களை நடத்தவும் அரசு திட்டம் தீட்டியது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில்தான் நாம் சிங்கள போர் அரக்கனுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கத் தீர்மானித்தோம். மண்கிண்டிமலையிலும், புலோப்பளையிலும், இறுதியாகப் பூநகரியிலும் நாம் திட்டமிட்டு நிகழ்த்திய வெற்றிகரமான தாக்குதல்கள் சிங்கள இராணுவத்துக்குக் கொடுக்கப்பட்ட பேரடிகளாகும். இதில் பூநகரிச் சமர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. போர்க்கலையில் புலிகள் இயக்கத்தின் படிநிலை வளர்ச்சியின் உயர்கட்ட பரிமாணத்தை இந்தச் சமர் எடுத்துக் காட்டுகிறது. பெரும் படையணிகளை நுட்பமாக நகர்த்தி எதிரியின் பாசறையின் பல மூலைகளை ஊடுருவிப் பெரும் கூட்டுப் படைத் தளங்களைக்கூட துரிதகதியில் அழிக்கவல்ல அபாரமான சக்தி புலிகளிடம் உண்டு என்பதை நாம் சிங்களப் பேரினவாதத்துக்கு உணர்த்தியுள்ளோம். 'இனப்பிரச்சினையே இல்லாமல் போய்விட்டது' என்று கூறியவர்களுக்கு இனப் பிரச்சினையின் விஸ்வரூபத்தைக் காட்டியுள்ளோம். இந்தச் சமர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆயுதப் படையினர் அழிக்கப்பட்டுள்ளனர். எமது தாயக மண் மீது படையெடுப்பை நடத்தலாம்; ஆக்கிரமிப்பை நிகழ்த்தலாம்; அகலக்கால் வைக்கலாம் எனக் கற்பனை செய்துவரும் இராணுவவாதிகளுக்கும், பேரினவாதிகளுக்கும் புலிகளின் இந்தத் துணிகரத் தாக்குதல்கள் தகுந்த பாடமாக அமையுமென நினைக்கிறேன்.

இராணுவத் தீர்வு என்ற பாதை எத்தகைய பயங்கரமான பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கொழும்பிலிருந்து ஆட்சி புரிபவர்கள் இனியாவது உணர்ந்து கொள்வார்கள் என நம்புகிறேன். சிங்களப் பேரினவாத அரசு போன்று நாம் இன்னும் சமாதானக் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமரசப் பாதைக்கு முட்டுக் கட்டை போடவில்லை. ஆனால் சிங்கள ஆட்சிபீடம் தனது இராணுவ அணுகுமுறையை இறுகப் பற்றிக்கொண்டு எமது மண்மீது படையெடுப்பை நிகழ்த்தினால் அல்லது எமது மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடருமானால் எமது விடுதலை இயக்கம் சமாதானத்தின் கதவுகளை நிரந்தரமாக மூடிவிடும் என்பதை நான் இங்கு தெட்டத்தெளிவாகக் கூறவிரும்புகிறேன். சிங்களப் பேரினவாதப் போக்கை நாம் நம்பியதில்லை. அந்தப் போக்கில் மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை. சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரே பாதையைத்தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. அந்தப் பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்தப் பாதை வழியேதான் எமது விடுதலை இயக்கம் தனது இலட்சியப் பயணத்தை தொடர்கிறது. இந்தப் பாதை மிகவும் கடினமானது. கற்களும், முட்களும் நிறைந்தது. விலங்குகளும் விச ஜந்துக்களும் நிறைந்தது. ஆயினும் நாம் இந்தப் பாதை வழியே எமது பயணத்தைத் தொடர்கிறோம். எமது மாவீரர்கள் இந்தப் பாதை வழியாகவே நடந்தார்கள். எமக்கு வழிகாட்டியாக எமக்கு முன்னே சென்றார்கள். கற்களையும் முட்களையும் அகற்றிப் பாதையைச் செப்பனிட்டுத் தந்தார்கள். விலங்குகளையும் விச ஜந்துக்களையும் கொன்றொழித்தார்கள். அந்தப் பாதை வழியே விளக்கேற்றி வைத்தார்கள். எமது மாவீரர்கள் ஏற்றி வைத்த அந்தச் சுடரொளியில் தெளிவாகப் புலப்படும் அந்தப் பாதை வழியாக நாம் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோமாக.

**வே. பிரபாகரன்**
**தலைவர்**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

கடந்த மாவீரர் நாளான 27/11/93 அன்று தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் விடுத்த மாவீரர்நாள் செய்தியின் முழு விபரமும் மேலே தரப்பட்டுள்ளது.

# போரென்று படைகொண்டு எல்லைக்குள் நுழைந்தாயா?

**அணிபெறத் தமிழர் கூட்டம் போர்த் தொழில் பயில்வ தெண்ணி புவியெலாம் நடுங் கிற்றென்ற வார்த்தையைக் கேட்டு நெஞ்சு மகிழ்ந்து கூத் தாடல் என்றோ? எந்நாளோ?**

என்ற தலைப்பில் கவிஞர் பார திதாசன் எழுதிய கவிதையில் வரும் வரிகளையே மேலே தந் திருக்கிறேன். பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம். மகாகவி பாரதியார் மீது அவ ருக்கு ஏற்பட்ட பக்தி காரணமா கவும், பாரதியாரின் கவிதைக ளும் அந்தக் கவிதை வாயிலாக வெளிப்பட்ட கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட காரணத்தினாலும் தனது பெயரை பாரதி+தாசன் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். பத்து ஆண்டு காலம் பாரதியாரோடு பழகி அவருக்கு உறுதுணையாக இருந்த பெருமையும் உண்டு.

பாரதியார் வித்திட்ட தமிழ் தேசிய எழுச்சிக்கு பாரதிதாசன் தனது கவித்துவத்தால் நீருற்றி வளர்த்தவர். தமிழ்மொழி, தமி ழன், தமிழ்நாடு என்று வரும் பொழுது பாரதியாரையும் விஞ்சும் வண்ணம் கவிதை படைத்தவர். பாரதிதாசனின் கவிதைகளின் தென்றலின் சுகத்தைவிட புய லின் சீற்றம் அதிகமாக இருக் கும்.

"பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிச மெனச் சங்கே முழங்கு" என்று ஆவேசக் குரல் எழுப்பியவர்.

தமிழ் மொழியின் இனிமை பற் றிக் கவிபாட வைத்த பாரதிதா சன்

**மங்கை தரும் சுகமும் எம் மாத்த மிழுக்கு ஈடோ?**
**தமிழுக்கு அமுதென்று பேர்**
**அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!**

என்று தமது அதீத தமிழ்க் காதலை வெளிப்படுத்துகிறார்.

மகாகவி பாரதியாரின் காலம் 11-08-1882 இல் இருந்து 11-09-1921 வரை (39 ஆண்டு 1 மாதம்). பாரதிதாசனின் காலம் 29-04-1891 இல் இருந்து 21-04-1964 வரை (72 ஆண்டு 11 மாதம் 22 நாள்)

இந்தக் கால இடைவெளியே பாரதி, பாரதிதாசன் இருவருக் கும் இடையே தமிழ்த் தேசிய எழுச்சி வெளிப்பாடுகளில் காணப்படும் வேற்றுமைக்கு கார ணமாகும்.

பாரதியார் காலம், தமிழ்த்தேசியம் வேர்விடத் தொடங்கிய காலம். பாரதியாரே 'செந்தமிழ்நாடு' என்று முதலில் வரையறுத்தவர். வாழ்க நிரந்தரம், வாழ்க தமிழ் மொழி, வாழிய வாழியவே என்று தமிழ்மொழி வாழ்த்துப் பாடியவ ரும் அவரேதான்.

பாரதிதாசன் காலம் தமிழ்த்தே சியம் துளிர் விட்டு கிளைவிட்ட காலம். தமிழ்த் தேசியத்தோடு திராவிடத் தேசியமும் வளர்ந்த காலம். திராவிட நாடு திராவி டர்க்கே என்ற பிரிவினை முழக் கம் கேட்ட காலம். இந்தி எதிர்ப்பு கொழுந்து விட்டெரிந்த காலம்.

விதியே! விதியே! தமிழ்ச் சாதியை என் செய்யக் கருதியி ருக்கின்றாயடா? என்று கழிவிரக் கப்பட்டவர் பாரதி. பாரதிதா சனோ

**கொலை வாளினை எடடா மிகு**
**கொடியோர் செயல் அறவே**
**குணமேவிய தமிழா!**

என்று போர் முரசம் கொட்டிய வர். தமிழனைச் சிறுத்தையோடு ஒப்பிட்டு

**பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு**
**திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில் வா!**
**எலி என உன்னை இகழ்ந்த வர் நடுங்கப்**
**புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்!**
**சிங்க இளைஞனே திருப்பு முகம்! திற விழி!**
**இங்குன் நாட்டுக் கிழிகழுதை ஆட்சியா?**
**தமிழுக்கு விலங்கிட்டு தாயகம் பற்றி**
**நமக்குள் உரிமை தனக்கென் பார் எனில்**
**வழி வழி வந்த உன் மறத்த னம் எங்கே?**
**வையம் ஆண்டவண்டமிழ் மரபே**
**கையிருப்பைக் காட்ட எழுந் திரு!**

திராவிட நாடு (தமிழ்நாடு + கர் நாடகா + கேரளம் + ஆந்திரம்) பாரத நாட்டிலிருந்து பிரிந்து தனிநாடாக சுதந்திர நாடாக உருவாக வேண்டும் என்ற எண் ணத்தையே வண்ணக் கவிதை யில் வடித்திருக்கிறார். ஆனால் 1963 இல் திராவிட நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை அண்ணாவும் தி. மு. க. வும் கைகழுவி அதற்கு முழுக்குப் போட்டபோது -

**வாழ்க வாழ்கவே**
**வளமார் எமது திராவிடநாடு**
**வாழ்க வாழ்கவே**
**சூழும் தென்கடல் ஆடும் குமரி**
**தொடரும் வடபால் அடல்சேர் வங்கம்**
**ஆழும் கடல்கள் கிழக்கு மேற் காம்**
**அறிவும் திறனும் செறிந்த நாடு**
**பண்டைத் தமிழும் தமிழில் மலர்ந்த**

# வேங்கை செத்தாலும் விடுவானா ஈழத்தை நீ ஆள?

**பண்ணிகர் தெலுங்கு துளுமலையாளம்**
**கண்டை நிகர்கன்னடமெனும் மொழிகள்**
**கமழக் கலைகள் சிறந்த நாடு**
**அகிலும் தேக்கும் அழியாக் குன்றம்**
**அழகாய் முத்துக்குவியும் கடல்கள்**
**முகிலும் செந்நெலும் முழங்கு நன் செய்**
**முல்லைக் காடு மணக்கும் நாடு**

என்று திவட்டாத தேன் தமிழில் திராவிட நாட்டுப் பண்பாடிய பாரதிதாசனது கனவுகளும் கலைந்தன.

இப்போது - மூன்று தசாப்தங் களுக்குப்பின் -பாரதிதாசன் கண்ட கனவுகள், நெஞ்சில் தேக்கி வைத்திருந்த ஆசைகள் பலிக்கத் தொடங்கிவிட்டன. தமிழ் நாட்டில் அல்ல. தமிழீழத் தில்!

**அணிபெறத் தமிழர் கூட்டம்**
**போர்த்தொழில் பயில்வதெண் ணிப்**
**புவியெலாம் நடுங்கிற்றென்ற**
**வார்த்தையைக் கேட்டு நெஞ்சு மகிழ்ந்து கூத்தாடல் என்றோ?**

என்று புரட்சிக் கவிஞன் பாரதி தாசன் எழுப்பிய கேள்விக்கு கடந்த மாதம் 11 ஆம் நாள் விடியற்காலை 1.30 மணிக்கு விடுதலைப் புலிகள் தமிழீழ மண்ணில் சிறீலங்கா ஏகாதிபத் திய சிறீலங்கா அரசின் ஆக்கிர மிப்புச் சின்னங்களாக எழுப்பப் பட்ட இராணுவக் கடற்படைத் தளங்களை ஏழு மணித்தியால அவகாசத்தில் தகர்த்து எறிந்த போது விடை கிடைத்தது.

நாகதேவன்துறை, பூநகரி தளங் களை மின்னல் வேகத்தில் அகோரமாகத் தாக்கிக் கைப்பற் றியதைக் கண்டு சிறீலங்கா உயர் மட்ட அதிகாரிகள், ஆட்சியாளர் கள் மட்டுமல்ல முழு உலகுமே வியப்பினால் உறைந்து போய் விட்டது.

உலக கெரில்லாத் தாக்குதல் வரலாற்றில் எதிரியின் முகாம் தாக்கப்பட்டு, பெருந்தொகையி னரான படையினர் கொல்லப்பட் டது இதுவே முதல் தடவை என இலண்டன் பல்கலைக்கழக ஆய் வாளர் ஒருவர் தெரிவித்துள் ளார்.

நாகதேவன்துறை - பூநகரி தளங்கள் புலிகளால் தாக்கித் தகர்க்கப்பட்ட செய்தியை பி.- பி. சி. வானொலியும், அவுஸ்தி ரேலிய வானொலியும் மூன்று நாட்களாக முக்கிய செய்திகளா கவும், முதற் செய்தியாகவும் ஒலிபரப்புச் செய்தன.

**நக்கீரன்**

சிறீலங்கா படையினரின் ஆயுத இழப்பு 30 கோடிக்கும் அதிக மானதுமாகும். மண்கிண்டிமலை இராணுவ முகாம் தாக்குதலில் இழந்த ஆயுதப் பெறுமதியை விட இது ஐந்து மடங்கு அதி கம். 30 கோடி இழப்பில் கணி சமான பங்கு சிறீலங்காக் கடற் படைக்கு உரியது. ஐந்து நீர் ஜெட் படகுகள், சுடுகலன் பொருத்தப்பட்ட விசைப்படகு கள், மூன்று சாதாரண விசைப் படகுகள், ஒன்பது இயந்திரம் பொருத்திய விசைப்படகுகள், பதின்நான்கு இயந்திரம் பொருத் தப்படாத படகுகள் ஆக மொத் தம் முப்பத்தாறு படகுகளை கடற்படை இழந்துள்ளது. இவற் றின் பெறுமதி சுமார் 9 கோடி யாகும்.

> **ஓராயிரம் ஆண்டு இடைவெளிக்குப் பின் இப்போதுதான் ஒரு போர்க்களத்தை பார்க் கிறது. அங்கே எதிரிகள் தலைகள் புலிகளால் வேட்டை ஆடப்படுவ தைக் காண்கிறோம். ஒரு காலத்தில் உல கெங்கும் கொடிகட்டி ஆண்ட தமிழினம் மீண் டும் அந்த திசைநோக்கி நடைபோடத் தொடங் கிவிட்டது. பாரதிதாச னின் ஆசைகள் நிறை வேறத் தொடங்கிவிட் டன.**

இதற்கு முன் 1992 ஆவணி 28ம் நாள் ஒரு நீர் ஜெட் கடற்புலிக ளால் மண்டைதீவில் இருந்து கடத்தப்பட்டது. 1993 ஆவணி 26 இல் கிளாலிக் கடற்பரப்பில் மூன்று விசைப்படகுகள் கடற்க ரும்புலிகளாலும், கடற்புலிக ளாலும் அழிக்கப்பட்டன. மூன்று நாட்கள் கழித்து ஆவணி 31 இல் பருத்தித்துறைக் கடலில் இஸ்ரேலியத் தயாரிப்பான டோரா யுத்தக் கப்பல் கடற்கரும் புலிகளின் தாக்குதலால் அழிக் கப்பட்டது. இதன் பெறுமதி 30 கோடி.

மொத்தத்தில் மிகக் குறுகிய காலத்தில் சிறீலங்கா கடற்ப டையின் முதுகெலும்பு முறிக்கப் பட்டது.

ஒப்பரேசன் யாழ்தேவி நடவடிக் கையில் ஏற்பட்ட தோல்வியை நியாயப்படுத்த இராணுவத் தரப் பில் ஒரு சிலர் முயன்றனர். நாகதேவன் -பூநகரியில் சிறீலங் காப் படையினருக்கு ஏற்பட்ட தோல்வி விவாதத்திற்கு அப்பாற் பட்டது.

இலங்கையில் இனப்பிரச்சனை என்ற ஒன்றில்லை என்ற சனா திபதி விஜயதுங்கா சரி, இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை நாடிய உயர்மட்ட இரா ணுவ அதிகாரிகள் சரி இப்போது தங்கள் நிலைப்பாட்டை மறுபரி சீலனை செய்யத் தள்ளப்பட்டி ருக்கிறார்கள்.

யாழ். குடாநாட்டைச் சுற்றி இரா ணுவ வேலி ஒன்றைப் போட்டு புலிகளை அதற்குள் முடக்கிவிட சிறீலங்கா இராணுவம் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தி ருக்கிறது.

சிறீலங்கா பாராளுமன்றத்தில் வட -கிழக்கு யுத்தத்தை பற்றிப் பேசிய பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா, பிரபாகரன் கொழும்பை நோக்கி இன்னும் சில வாரங்களில் படையெடுத்து வரக்கூடும் என்று பேசியிருக்கி றார். புலிகளைத் தோற்கடிக்க முடியாமல் இருக்கிறதே என்ற விரக்தியில் இப்படிப் பேசியிருக் கிறார்.

தங்கள் மண்ணில் நின்று கொண்டு தங்கள் தாயக பூமி யின் விடுதலைக்காகப் போராடு கின்ற விடுதலைப் புலிகளை, சுதந்திரத்துக்காக தங்கள் இன் னுயிரை தியாகம் செய்யும் வேங் கைகளை உயிருக்காக துப்பாக்கி ஏந்தும் ஒரு அந்நியப் படை அந் நிய மண்ணில் வெற்றி கொள்ள முடியாது என்ற உண்மையை சிங்களப் பேரினவாதிகள் உணர மறுக்கிறார்கள்.

போர் முனையில் படையினருக்கு இருக்க வேண்டிய செருக்கு இர ண்டு. ஒன்று வீரம். மற்றது மானம். இவையிரண்டும் புலிக ளிடம் நிறைய இருக்கிறது.

இஸ்ரேலியர் மூன்று யுத்தத்தில் தங்களை விட இருபது மடங்கு ஆள்பலம் கொண்ட அராபியர் களைத் தோற்கடித்ததற்கு கார ணம் தங்கள் மண்ணில் -தங்கள் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியமையே. ஒவ்வொரு இஸ்ரேலிய வீரனுக்கும் தெரிந்த உண்மை ஒன்றிருந்தது. அராபி யர்கள் எத்தனை முறையும் தோற்கலாம். ஆனால் இஸ்ரே லியர்கள் ஒருமுறைகூட தோற்க முடியாது. தோற்றால் இஸ்ரேல் என்ற நாடே உலகப் படத்திலி ருந்து மறைந்துவிடும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமிழனின் வீரத்தை பற்றி இப் படி சொல்கிறார்.

**வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும்**
**தோளெங்கள் வெற்றித் தோள் கள்**
**கங்கைபோல் காவிரிபோல் கருத்துக்கள்**
**ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்**
**செங்குருதி தனிற்கமழ்ந்து வீரம் செய்கின்ற**
**தமிழ் எங்கள் மூச்சாம்!**

தொடர்ச்சி 14ம பக்கம் ....

**கிளாலிப்பிடியும், பூநகரிக்கடியும்**



# அரசு உதவும் ஆயுதக் குழுக்களிடம் சட்டவிரோத சிறைச்சாலைகள்

■ மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

சிறீலங்கா அரசின் ஆதரவுடன் இயங்கிவரும் ஆயுதக் குழுக்கள் சட்டவிரோதமான பல சிறைக் கூடங்களையும், சித்திரவதை முகாம்களையும் வைத்திருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. இவற்றில் சில அண்மைக் காலங்களில்கூட ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அது குற்றம் சாட்டியுள்ளது.

சட்டபூர்வமற்ற முறையில் இயங்கும் சில அமைப்புக்களின் சட்டபூர்வமற்ற பல சிறைக்கூடங்கள் -சிறீலங்காவின் பல பகுதிகளில் இன்னமும் செயல்படுவதாக தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக மனித உரிமை நிறுவனம் மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளன.

இவற்றில் சில அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாகவும், இன்னும் சில பலகாலமாக இயங்கிவருவதாகவும் தற்போது கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது கிடைத்த தகவல்களை மையமாக வைத்து இச்சிறைக்கூடங்கள் வவுனியா, மட்டக்களப்பு, தினியாட்ட கந்திய, பதுளை, தெமோதர ஆகிய பகுதிகளில் செயல்பட்டு வருவதாகவும் மேலும் சில நடமாடும் வதைமுகாம்களாக செயல்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

தனிப்பட்ட கொலைக் கும்பலினால் நடைபெறும் இவ்வதை முகாம்களில் தமிழ் இளைஞர்களும், தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை சட்டபூர்வமற்ற நடவடிக்கை என்றும் இது தொடர்பாக தகவல் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சட்டபூர்வமற்ற குழுக்களினால் நடாத்தப்பட்டு வரும் ஆள் கடத்தல் மற்றும் கொலை குறித்த புகார்களை விசாரிக்குமாறு டி. பி. விஜயதுங்க பணித்துள்ளதாக கூறப்படுகிறது. ■

# மன்னம்பிட்டி கிராமத்தில் 3 இளைஞர்கள் மர்ம மறைவு

மன்னம்பிட்டியில் அண்மையில் மூன்று வாலிபர்கள் காணாமல் போயுள்ளனர்.

மயில்வாகனம் கீர்த்திநாதன் (28), ஆறுமுகம் சிவஞானம் (35), செல்வராசா (37) ஆகிய மூவரும் மன்னம்பிட்டிக் குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளையில் அவ்விடம் இராணுவம் சென்று திரும்பியதை அடுத்து அவர்களை அங்கு காணவில்லை என்று இவர்களின் மனைவியர் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னரும் பல இளைஞர்கள் இவ்விதம் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர் என்றும் இதனால் அப்பகுதியில் மர்மக் கடத்தல் குறித்து அச்சம் எழுந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் 1200 பேருக்கு மீளளிப்பு

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரத்து இருநூறு பேருக்கு 1993 மாவீரர் வாரத்தில் தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நிதிப்பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி அறிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான பங்களிப்பாக தமிழீழ மீட்பு நிதிக் கடன் திட்டத்தில் பங்கேற்றவர்களில் 1200 பேருக்கு இம் மீட்பு நிதிக்கடன் மீளளிக்கப்பட்டுள்ளது. ■

# இராணுவ அணுகுமுறை எக்காலத்திலும் வெற்றியளிக்காது

■ யாழ் அரசாங்க அதிபர்

இராணுவ அணுகுமுறை மூலம் தீர்வு காணும் நோக்கம் எக்காலத்திலும் வெற்றியளிக்காது என யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வனசிங்காவுக்கு நேரில் தெரிவித்தார்.

அவர் மேலும், "சுப்பர் சொனிக் விமானக் குண்டுவீச்சுக்களால் பொதுமக்களே பாதிக்கப்படுகிறார்கள். பாடசாலை மாணவர்கள், சிறுகுழந்தைகள், தாய்மார் மனோநிலைப் பயத்திற்கு உள்ளாகி மனோநிலைப் பாதிப்புகளுக்கு ஆளாகிவருகின்றனர். யாழ் சென் ஜேம்ஸ் ஆலயக் குண்டு வீச்சுத் தாக்குதலில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 9 பேர் ஆலயத்துள் உடல்சிதறி இறந்த கொடுமையும் மற்றும் 7 பேர் பின்னர் மரணமான சம்பவமும் இடம்பெற்றுள்ளது. இதில் மட்டும் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை நேரத்தில் நடைபெறும் இக்குண்டு வீச்சுக்களால் மாணவர்கள் பெரும் பீதிக்குள்ளாகி சுமுகமாக பரீட்சைக்குத் தோற்றமுடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே யாழ் குடாநாட்டில் நடத்தப்படும் சுப்பர் சொனிக் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும், செல் எறிகணைத் தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்தும்படி உத்தரவிட வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பத்திரிகைகளுக்கு கண்டனம்

யாழ் நகரில் இவ்வளவு மூர்க்கத்தனமான குண்டு வீச்சு அதுவும் வழிபாட்டுத் தலமொன்று மீது கூட நடாத்தப்பட்டு பல பக்தர்களையும் அப்பாவி அடைந்தவர்களையும் பலி எடுத்தும்கூட கொழும்புப் பத்திரிகைகள் இது குறித்து மௌனம் காட்டியமையால் தெற்கில் வாழும் மக்களுக்கு அங்கு வாழும் மக்கள் படும் துயரங்கள், துன்பங்கள் ஒன்றும் தெரிவதில்லை; மறைக்கப்படுகிறது என்று கவலை தெரிவித்த அரசாங்க அதிபர், தான் போதிய உணவுப் பொருட்கள் கையிருப்பில் இருப்பதாக கூறியதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டமையை சுட்டிக்காட்டி அதனை மறுத்ததுடன் அப்பத்திரிகையையும் கண்டித்தார். "அங்கு உணவுப் பற்றாக்குறை நிலவும் போது போதிய உணவு இருப்பில் இருப்பதாக நான் தெரிவித்ததாக அச்செய்தி கூறுகிறது. இப்படியாக உண்மை நிலைமைகளை மூடி மறைத்து இல்லாதவற்றை கொழும்புப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன" எனக் குறிப்பிட்டார். அத்துடன் யாழ் குடாநாட்டுக்கு விரைவில் மின்சாரத்தை வழங்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

## பிரதமரின் போலி வாக்குறுதி

யாழ். அரசாங்க அதிபர், சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து, யாழ் மீதான சுப்பர் சொனிக் குண்டு வீச்சு பாதிப்புக்களை விளக்கிய போது, கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களை நிறுத்தவும் மக்களுக்குத் தேவையான பாவனைப் பொருட்கள் மீதான தடையை நீக்கி அவற்றைக் குடாநாட்டுக்கு போதிய அளவு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ் அரசாங்க அதிபருக்கு வாக்குறுதி அளித்தார்.

ஆனால் அடுத்த ஞாயிற்றுக் கிழமையே சுப்பர் சொனிக் குண்டு வீச்சு உக்கிரப்படுத்தப் பட்டதுடன் பொருளாதாரத் தடைகளும் மேலும் இறுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. ■

## தொடர்கதை.....

அவனுடைய சுதந்திர நினைவுகள், இலட்சியங்கள் இன்று மட்டு மல்ல... இவர்கள் போக, இன்னுமொரு ஆக்கிரமிப்பாளன் இந்த மண்ணை ஆக்கிரமிக்கும் போதும் அவை கனவுகளாகவே போகும்...! நிர்மூலமாகும்...!
அப்பொழுதும் புதிய சந்ததியின் கனவுகள் தொடரும்...? இந்த மண்ணின் கதையும் தொடரும்... ■

# தென்மராட்சி கெற்பலியில் மாவீரர் சோலை திறப்பு

காடு வளர்ப்பினையும், மர நடுகையினையும் ஊக்குவிக்கும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் மாவீரர் வாரத்தில் மாவீரர் சோலை திறந்து வைக்கப்பட்டது. தென்மராட்சிக் கோட்டத்தில் கெற்பலி என்னும் இடத்தில் இம் மாவீரர் சோலை மரம் நடுகைத் திட்டம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் மாவீரர் நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதினரால் யாழ். மாவட்டத்தில் 3000 மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டு வருகின்றன. ■

# போராட்டத்தில் பிள்ளைகளை இணைப்பது அதிகரிப்பு

தமிழீழப் போராட்ட வெற்றி மீட்புக்காக தங்களது பிள்ளைகளை பெற்றோர் விடுதலைப் போரில் முன்வந்து இணைக்கும் சம்பவங்கள் வடமராட்சியில் மேலும் அதிகரித்து வருகிறது.

அண்மையில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வ. கருணாநிதி தனது மகன் க. வந்தியத்தேவனையும், இன்பருட்டியைச் சேர்ந்த தேவராசா தனது மகன் தேவகிருஸ்ணனையும் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ளனர். ■

# புலோப்பளை சமரில் வீரச்சாவடைந்த 85 மாவீரர்கள் நினைவாக கிளிநொச்சியில் பேரணி

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்த 85 மாவீரர்கள் நினைவாக கிளிநொச்சியில் அணிவகுப்பு பேரணி ஒன்று நடத்தப்பட்டது. கரடிப்போக்குச் சந்தியில் இருந்து ஆரம்பமான இப்பேரணியில் யாழ்தேவி புகையிரதம் போல வடிவமைக்கப்பட்ட ஊர்தி ஒன்றும் எடுத்துச் செல்லப்பட்டது. புகைவண்டிப் பெட்டிகளில் சிறீலங்கா இராணுவம் மீது விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதல்கள் சித்திரிக்கப்பட்டிருந்தன. கவச வாகனங்கள் எரிவதும் வரையப்பட்டிருந்தன.

புகைவண்டி இயந்திரத்தில் 85 மாவீரர்கள் நினைவுக் கற்கள் வைக்கப்பட்டு, மலர் வளையங்கள் வைக்கப்பட்டிருந்தன. மாவீரர்களின் உருவப்படங்களும் வைக்கப்பட்டிருந்தன. யாழ் தேவி ஊர்தியின் இருபுறமும் போராளிகளும், துணைப்படை வீரர்களும் அணிவகுத்து வந்தனர். இதன் பின்னால் விடுதலைப் புலிகள் பாண்ட் குழு சென்றது. இதைத் தொடர்ந்து பாடசாலை சாரணரும், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் நீண்ட வரிசையில் கொட்டும் மழையிலும் அணிவகுத்துச் சென்றனர்.

பி. ப. 2.15 மணிக்கு ஆரம்பமான இப்பேரணி கிளிநொச்சி கனிஸ்ட மகாவித்தியாலயச் சந்தியை வந்தடைந்தது. அங்கு அமைக்கப்பட்டிருந்த கிளிநொச்சி சிறப்புப் பொறுப்பாளர் லெப். கேணல் நாயகன் மற்றும் மேஜர் துஸ்யந்தன் ஆகியோரது உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி மேற்கு வட்டப் பொறுப்பாளர் சஞ்சீவி 85 மாவீரர்களுக்கும் தனித்தனியே ஈகைச் சுடர் ஏற்றினார். தொடர்ந்து நகர்ந்த பேரணி அரச செயலகம் முன் சென்றடைந்தது. அங்கு அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் வன்னி மாவட்ட மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி தலைமையில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. ■

# தமிழ்த்தினப் போட்டி பரிசளிப்பு

இவ்வாண்டுக்கான யாழ். மாவட்ட பாசாலைகளுக்கான தமிழ்த் தினப் போட்டி, திட்டமிட்டபடி நடைபெற்றுள்ளது. கோட்ட மாவட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூவருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டதுடன், போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுள்ளன. வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை தமிழ் வளர்ச்சிக் கழகமும், தமிழீழ மாணவர் அமைப்பும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் வழங்க முன்வந்தன. சான்றிதழ்களை கல்வித் திணைக்களமும் பாராட்டுச் சான்றிதழ்களை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் வழங்கின. ■



# தொடர்கதை

## சிறு கதை

ந.அனந்தராஜ்

தூக்கம் வராது, பாயில் புரண்டு கொண்டிருந்த மோகன் மனதில், ஆயிரமாயிரம் எண்ணங்கள் அலை மோதிக்கொண்டிருந்தன...!

"சேச்!... கெதியாய் விடியாதாம்... விடிஞ்சவுடனை குளிச்சு... சிவன் கோயிலுக்குப் போய்..." அவன் கற்பனைகள் அகன்று விரிந்து கொண்டிருந்தன. பாயில் படுத்திருந்தபடியே, தலையைச் சிறிது உயர்த்தி அந்தக் கூடத்தைப் பார்க்கின்றான். சாளரத்தினூடாக வந்த நிலவொளியில், அந்தக் கூடத்தினுள் ஒரு மூலையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்த அவனுடைய தாயும், மூத்த சகோதரியும், தங்கையும் அவன் கண்களை நிரப்பிக் கொண்டிருந்தனர்.

"எங்கடை சமுதாயத்திலை பணம் இல்லாட்டி உயிரோடை வாழுறதிலை அர்த்தமில்லை. பாவம் முப்பது வயதாப் போயும், அம்மாவாலையோ, என்னாலையோ, என்ரை அக்காவுக்கு ஒரு கலியாணத்தைச் செய்து பார்க்க முடியவில்லை. காசு உள்ளவங்கள் நாலு லட்சம், ஐந்து லட்சம் என்று ரொக்கத்தைக் கொடுத்து மாப்பிளையளை எடுத்துப் போடுவாங்கள்... ம்... எங்களைப் போல ஆக்களாலை..."

அவனுடைய உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்து எழுந்த பெருமூச்சு அனலாகப் பரவிக் கொண்டிருந்தது.

விடிந்தால் அவனுக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசிலுக்கான நேர்முகப் பரீட்சை. அதுவும் யாழ்ப்பாணத்தில் கச்சேரியிலேயே நடைபெறும். இதில் அவன் தேர்ந்தெடுக்கப்பட்டால் இரண்டு வருட மேற்படிப்புடன் வெளிநாட்டுச் சம்பளம்... அதற்குப் பிறகு அவனுடைய குடும்பக் கஸ்டங்களுக்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி... மோகனின் மனம் அமைதியின்றித் தவித்துக் கொண்டிருந்தது.

கற்பனையில் மிதந்து கொண்டிருந்த மோகன் மாறி மாறிப் புரண்டு கொண்டிருந்தான். நித்திரை மட்டும் அவனை நெருங்க மறுத்தது.

மனதில் பெருஞ் சுமை அழுத்திக் கொண்டிருக்கும் பொழுது, உறக்கம் எப்படித்தான் வரும்? அவனுடைய வாழ்க்கைப் போராட்டம் அவனுடன் மட்டுமா? அவனைச் சுற்றி ஒரு சிறு உலகமே அல்லவா இருக்கிறது? அந்த சின்னஞ் சிறிய உலகத்தின் தேவைகள் -அபிலாசைகள் அவனை அழுத்தும் பொழுது...?

மெல்ல மெல்ல அவன் கண்கள் அயர்ந்து கொண்டு வந்தது... அவனை அறியாமலேயே அவனுடைய கண்கள் மூடிக்கொண்டன.

"தம்பி!... ஆறு மணியாச்சுது... எழும்பி ஆயத்தப்படுத்து... அம்மாவும் சாப்பாடு ஆயத்தப்படுத்தி விட்டா..."

இறுதி நேரத் தூக்கத்தின் இன்பநுகர்வில் இருந்த மோகனுக்கு, அவள் தட்டி எழுப்பியதும் எதனையோ இழந்துவிட்டது போன்ற பிரமை!..

தெருவில் மூலைக்கு ஒன்றாக நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன... வேண்டாத விருந்தாளிகள் தமிழீழத் தெருக்களில், வீதிகளில் வருவதாலோ என்னவோ, நாய்களுக்குக்கூட ஒரு வெறுப்பு!...

"வௌ்...! வௌ்!... நாய்கள் தொடர்ந்தும் குரைத்துக் கொண்டே இருந்தன.

"ஆமிக்காரங்கள் நிக்கிறாங்கள் போல கிடக்கு... அதுதான் நாய்கள் இப்பிடி..."

படுக்கையில் இருந்து எழுந்த மோகன், உடலை நெட்டி முறித்துக் கொண்டான். இரவு, நீண்ட நேரம் நித்திரையில்லாது இருந்ததாலோ என்னவோ அவனுடைய கண்கள் சிவந்து போய் இருந்தன.

உமிக்கரியை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்ற மோகனின் நினைவுகள், இன்று நடைபெறப் போகும் நேர்முகப் பரீட்சை பற்றிய சிந்தனையில் அசை போட்டுக் கொண்டிருந்தன.

"தம்பி!... தம்பி!..." தமக்கையின் குரல் கேட்டு விறுவிறென்று குளித்து முடித்துவிட்டு துவாயினால் துடைத்தபடி வந்தான்.

"தம்பி!..., இண்டைக்கு ஏதோ 'கேர்பியு' எண்டு கதைக்குதுகள். தெருவெல்லாம் ஆமி நிக்கிறாங்கள்... சந்தியிலே கன பேரைப் பிடிச்சு வைச்சிருக்கிறாங்களாம். கொழும்பு பஸ்சுக்குப் போக வந்த சனங்களையும் பிடிச்சு வைச்சிருக்கிறாங்களாம். இங்கை தானாம் 'கேர்பியு'..."

பட படவென்று வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருந்த தமக்கை கமலத்தின் உடல் ஒரு நிலைகொள்ளாது தவித்துக் கொண்டிருந்தது.

"தம்பி!... எப்பிடியடா இண்டைக்கு யாழ்ப்பாணம் போகப் போறாய். அந்த வெள்ளைக்காரங்கள் கொழும்பில இருந்து 'இன்ரவியு'க்கென்றே வந்திருக்கிறாங்கள்..."

கமலத்தின் வார்த்தைகளைக் கேட்டதும், மோகனுக்கு நொந்துபோன இதயத்தில் முள்தைத்தது போல இருந்தது!

அந்த ஒரு கணத்தில் அவனுடைய எண்ணங்கள், கற்பனைகள் தடதடவென்று ஆட்டம் கண்டது.

"இந்த அறுந்து போவாங்களாலை பெரிய கரைச்சலாக்கிடக்கு... நினைச்சு, நினைச்சு ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு இடத்திலை ஊரடங்குச் சட்டம்... சேச்!... அமைதிப்படை எண்டு சொல்லிக் கொண்டு வந்த இந்த இந்தியாக்காரன் செய்யிற அநியாயத்தை ஆர் கேக்கினம்...?"

அவனது எதிர்பார்ப்புகள், கற்பனைகள் எல்லாம், அந்த வினாடியில் துகள், துகளாகிக் கொண்டிருந்தன...

"அக்கா!... எப்பிடியெண்டாலும் நான் போய்ப் பார்ப்பன்... இண்டைக்கு இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால், பிறகு எனக்கு இது கிடைக்காது... 'இன்ரவியு'வுக்குப் போனால் எனக்குத்தான் கட்டாயம் கிடைக்கும்..."

அவன் இயந்திரம் போல், சொல்லிக் கொண்டே புறப்படுவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

"தம்பி!... ஏதோ கடவுள்தான் உதவி செய்ய வேண்டும்... சரி, கோப்பையிலை சாப்பாடு போட்டிருக்கு, வந்து சாப்பிடு..."

கோப்பையில், சாப்பாட்டைப் போட்டுக்கொண்டே மோகனைச் சாப்பிடவைத்தாள்.

அவசர அவசரமாகச் சாப்பாட்டை விழுங்கி முடித்துவிட்டு எழுந்த மோகன், தனது ஆவணங்கள் அடங்கிய கோவைகளையும் தூக்கியபடி, தாயிடமும், சகோதரிகளிடமும் விடைபெற்றுக் கொண்டு வாசல் கதவைத் திறந்து வெளியேறினான்.

வீட்டில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரம் சென்றிருப்பான். வழியில் இராணுவத்தினரின் ஆரவாரத்தையே காணவில்லை. அவன் சென்ற பாதை வழியே எவரையும் காணாதது அவனுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

"ம்... இப்படியே ஒழுங்கையளுக்குள்ளாலை நடந்துபோய் வல்லைக்குப் போய்விட்டன் என்றால் பிறகு அங்காலை யாழ்ப்பாணம் போய்விடலாம்..."

'இன்ரவியு' நினைவு வந்ததும், அவனுடைய உள்ளத்தில் அடக்கி வைத்திருந்த ஆவல், பீறிட்டுப் பாய்ந்தது! தனது நடையில் வேகத்தைக் கூட்டி விரைந்து நடக்கத் தொடங்கினான்.

"ஸ்டாப்!..."

கர்ண கடூரமாக ஒலித்துக் கொண்டிருந்த அந்தக் குரலைக் கேட்டுத் திகைத்துப் போன மோகனுக்கு ஐந்து அறிவும் அடங்கிக் கொண்டு வருவதுபோல் இருந்தது.

மதகினுள் ஒளித்திருந்த இராணுவச் சிப்பாய்கள் அவனை நோக்கித் துப்பாக்கிகளுடன் வந்தனர். ஒரு சிப்பாய் கசுமுசு... என்று ஏதோ விளங்காத மொழியில் சத்தமிட்டபடி வந்தான்.

அப்பொழுது, தான் வசமாக மாட்டிக் கொண்டு விட்டதை உணர்ந்த மோகன், மிரளத் தொடங்கினான். அவனுடைய கையில் இருந்த கோவையை ஒருவன் பறித்தெடுத்தான்.

"யூ... எல் ரீ ரீ ஈ..."

துப்பாக்கியை நெஞ்சில் வைத்தபடி ஒரு சிப்பாய் ஆவேசமாக நெருங்கினான்.

"வெயர் கோ?... ருடே கர்பியு..."

ஆங்கிலம் செத்துக் கொண்டிருப்பதை நினைத்ததும் மோகனுக்குப் பயம், வேதனையின் மத்தியிலும் உள்ளூரச் சிரிப்பும் வந்தது.

"சேர்!... ஐ கோ இன்ரவியு..."

நடுங்கும் குரலில் அவனுடைய பாணியிலேயே மோகன் முனகிக் கொண்டிருந்தான். மோகன் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே, அவர்களில் ஒருவன் வந்து, வெள்ளைக் கயிற்றினால், மோகனின் இரு கைகளையும் பின்புறமாகக் கட்டிவிட்டான். அவனைப் போன்று, அங்கே பலர் கூட்டிவரப்பட்டனர்.

எல்லோருமே, கைகள் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் ஒருவர் பின் ஒருவராகக் கூட்டிச் செல்லப்பட்டனர். அப்படியே உடுப்பிட்டி வீதி வழியாக வந்து சிவன்கோவில் முன் வீதியில் எல்லோரையும் நிற்க வைத்தார்கள். மோகனைக் கொண்டு போய்விட்ட ஒரு மணித்தியாலத்திற்குள் நூற்றுக்கணக்கான இளைஞர்களையும், வயதானவர்களையும் கூடக் கட்டி இழுத்துக் கொண்டு வந்து வெயிலில் விட்டார்கள்!

நேரம் போய்க் கொண்டே இருந்தது! உச்சி வெயில் அவனுடைய உடலைச் சுட்டெரித்துக் கொண்டிருந்தது.

"ஐயோ!... கடவுளே!... பத்து மணியாச்சுது. இன்ரவியு இவ்வளவு நேரமும் தொடங்கி இருக்கும்... இப்பிடி எங்கடை பக்கத்திலை திடீரென்று ஊரடங்குச் சட்டம் போடுவாங்கள் எண்டு, அவங்களுக்குத் தெரியப் போகுதோ?"

அவனால் அதற்கு மேலும் பொறுமையுடன் இருக்க முடியவில்லை...

"சேர்!... இன்றைக்கு இன்ரவியுக்கு யாழ்ப்பாணம் போகவேணும்... என்னை விடமாட்டியளே..."

அவனுடைய மனதுக்குள் இருந்த ஆதங்கம் வார்த்தைகளாகி ஒவ்வொன்றாக வெளிவந்து கொண்டிருந்தன.

கோயில் கோபுரத்தின் கீழ் நின்ற சிப்பாயிடம் சென்று பவ்வியமாகக் கேட்டுக்கொண்டு நின்றான்.

"யூ... பிளடி ராஸ்கல்!... வட் இன்ரவியு...?

ஏதோ கேட்கக் கூடாததைக் கேட்டதுபோல் சத்தமிட்டபடியே மோகன் மீது பாய்ந்து தாக்கத் தொடங்கிவிட்டான்.

அந்தச் சிப்பாய் அவனைத் தாக்குவதைக் கண்டதும் தூரத்தில் நின்ற மற்றைய சிப்பாய்களும் இந்தியில் ஏதோ கத்திக் கொண்டு அவனருகில் வந்ததும்,

"யூ... எல். ரீ. ரீ. ஈ...." என்று சத்தமிட்டபடி தாக்கத் தொடங்கிவிட்டார்கள்!

மோகனுக்கும் தான் ஏன் தாக்கப்படுகின்றேன் என்று தெரியவில்லை!

அந்தச் சிப்பாய்களுக்கு ஏன் தாக்குகின்றோம் என்றும் தெரிந்திருக்காது.

அங்கே ஒரு வினாடி மயான அமைதியில் அந்தப் பிரதேசமே சூனியமாகிக் கொண்டு வந்தது.

அந்தச் சிப்பாய்களின் மிருகத்தனமான அடி வேதனையில் கண்கள் இருண்டு கொண்டுவர அப்படியே மயங்கி விழுந்துவிட்டான்... அவனோடு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்கள் திகைத்துப் போய் நின்றார்கள்!

"இன்ரவியு... இன்ரவியு... வேலை... அக்கா கலியாணம்..."

அந்த மயக்க நிலையிலும் அவனுடைய உதடுகள் அவனை அறியாமலேயே புலம்பிக் கொண்டிருந்தன!

அவனுடைய கோவையில் இருந்த ஆவணங்கள் சோழகக் காற்றில் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பறந்து கொண்டிருந்தன.

தொடர்ச்சி 5ம் பக்கம் ....

# பூநகரி கூட்டுத்தளம் மீது புலிகள் வீசச்செய்த புயல்

**10-11-1993** நள்ளிரவு கடந்த நிலையில் பூநகரிக் கூட்டுத்தளம் மீது புலிகள் நடாத்திய பிரமிப்பூட்டும் பாரிய தாக்குதலில், பல நூற்றுக்கணக்கான சிங்களப் படையினர் பலியாகிவிட்டனர். தாக்குதலை வெற்றிகரமாக முடித்துவிட்டு கைப்பற்றிய ஆயுத தளபாடங்களுடன் புலிகள் வெளியேறிய பின், பூநகரிக் கூட்டுத்தளம் சுப்பர் சொனிக்கின் குண்டு வீச்சுக்கு இலக்கான வீடு போல சின்னாபின்னமாகிக் கிடந்தது. கொல்லப்பட்ட படையினரது எண்ணிக்கை, ஏறக்குறைய ஆயிரமாக இருக்கலாம் என உலகச் செய்தி நிறுவனங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன. இப்பெரும் தாக்குதலில் புலிவீரர்கள் கைப்பற்றிய ஆயுதங்களின் எண்ணிக்கை, சிங்களப் பேரினவாதிகளைக் கனவிலும் அச்சுறுத்தக்கூடிய அளவுக்கு பெரும் தொகையினதாகும்.

ஆயுதப் போரில் சடுதியான திருப்பத்தையும், விடுதலைப் போராட்டத்தில் ஒரு புதிய பரிமாணத்தையும் ஏற்படுத்தியுள்ள இத்தாக்குதல் புலிகள் இயக்கத்தின் பலத்தையும் ஆற்றலையும் அளவிடும் ஒரு தராசாகவும் அமைந்துவிட்டது.

ஒரே சமயத்தில் தரை மூலமும் -கடல் மூலமுமான தாக்குதல் திட்டங்களையும் அதேவேளையில் தரையிலும் -கடலிலுமான சண்டைகளையும் கொண்ட இப்பெரும் தாக்குதலுக்கு ஈருடக உயிரினமான தவளையின் பெயர் சூட்டல் பொருள் பொதிந்ததாக அமைந்துள்ளது. கடல் புலிகளின் சிறப்புத் தளபதி திரு. -சூசை கடல் நடவடிக்கைகளை வழிநடாத்த மூத்த தளபதி திரு. சொர்ணம் தரை நடவடிக்கைகளை வழிநடாத்த, இவையிரண்டையும் ஒருங்கிணைத்து, இப்பெரும் தாக்குதலை மூத்த தளபதி திரு. பொட்டு அவர்கள் செயற்படுத்த தலைவர் பிரபாகரன் அவர்கள் இந்நடவடிக்கையை நெறிப்படுத்தித் தலைமை தாங்கினார்.

இப்பெரும் . தாக்குதலில் முல்லை, வன்னி, மன்னார், யாழ்ப்பாணம் என்று வட தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களினதும் சிறப்புத் தளபதிகளும் மகளிர் படையணிகளின் சிறப்புத் தளபதியும் அணித் தலைவர்களாகக் கலந்து கொண்டு தாக்குதலில் பங்கேற்றனர். இதில் முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி லெப். கேணல் அன்பு வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். அதேவேளை மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டத்தின் பெரிய தொரு படையணி தளபதி கருணா தலைமையில் இத்தாக்குதலில் முக்கிய பங்கேற்று சிறப்பாகப் பணியாற்றியுள்ளது.

இந்த ஈருடகத் தாக்குதலில் கடற்புலிகளின் பங்கும் பணியும் குறிப்பிடும்படியாக இருந்தது. கடற்படையின் நகர்வுகளையும் அதன் அசைவியக்கத்தையும் தடுத்து நிறுத்திய தளபதி சூசையின் தலைமையிலான கடற்புலிகள், இம்முகாம் தாக்குதலின் வெற்றிக்கு பெரும் பங்காற்றினர். கடற்கரும்புலிகள் மேஜர் கணேஸ், மேஜர் கோபி ஆகியோர் இதற்கு உறுதுணையாக உரம் சேர்த்துவிட்டு வீரச்சாவடைந்துவிட்டனர்.

பூநகரிக் கூட்டுத் தளத்தின் பூகோள அமைவிடம் சிங்களப் படைக்குச் சாதகமாகவே உள்ளது என்பது வெளிப்படை. கடற்படையின் துணையும், வான்வழி உதவிகளை சுலபமாகப் பெறக்கூடிய நில அமைப்பும், பெரும் எடுப்பிலான கெரில்லாத் தாக்குதலுக்குச் சாத்தியமற்ற ஒரு நிலப்பரப்பையும் கொண்ட ஒரு பிரதேசமாகவே பூநகரிப் பகுதி இருந்தது. இதனால் புலிகள் ஒரு பெரும் தாக்குதலை பூநகரி கூட்டுத்தளம் மீது நடாத்தத் துணியமாட்டார்கள் என்றும், அவ்விதம் நடத்தினாலும் சுலபமாக அதை முறியடித்துவிடலாம் என்றும் படையினர் எண்ணியிருப்பர். ஆனால் புலிகளின் தலைமை தயாரித்த சிறப்பான தாக்குதற் திட்டங்களும் -அதற்கே உரிய தந்திரோபாயங்களும், புலி வீரர்களின் அபாரமான துணிச்சலும் -போர்த்திறனும் புலிகள் இயக்கத்திற்கு ஒரு பெரிய வெற்றியைத் தேடிக் கொடுத்துவிட்டன. இப்பெரும் வெற்றியானது தமிழீழ மக்கள் மத்தியிலும், சிங்கள தேசத்திலும், சர்வதேச சமூகத்திலும் பல தாக்கங்களையும் -மாற்றங்களையும் ஏற்படுத்தும் என்பது உறுதி.

குடாநாட்டைச் சூழ இடப்பட்ட முற்றுகை வலையை இணைக்கும் பிரதான முடிச்சுக்களில், பூநகரி கூட்டுத்தளம் முக்கியமானது. கடற்படை, தரைப்படை என்று ஏறக்குறைய 1500 பேரைக் கொண்டிருந்த பிரமாண்டமான தளம் அது. 17-10-91 அன்று மண்டை தீவில் இருந்து படையெடுத்து வந்த சிங்கள இராணுவம் பூநகரியில் ஒரு முகாமை நிறுவி, கேரதீவு -சங்குப்பிட்டிப் பாதையை தடைசெய்தது. அதன் பின்னர் 28-06-92 அன்று கொம்படி -ஊரியான் பாதையும் இராணுவ நடவடிக்கை ஒன்றின் மூலம் தடைசெய்யப்பட, கிளாலி கடல் நீரேரி, போக்குவரத்துப் பாதையாக மாறியது. இந்தக் கடல்நீரேரிப் பயணத்தை தடைசெய்ய நாகதேவன்துறையை உள்ளிட்ட ஞானிமடத்தில், ஒரு கடற்படைத் தளத்தை அரசு நிறுவியது. இக்கடற்படைத் தளத்தைச் சேர்ந்த படையினர், பிரயாணிகளின் படகுகளை வழிமறித்துத் தாக்கி, சுமார் 350 பேர்வரை படுகொலை செய்திருப்பது நினைவு கூரத்தக்கது.

நவீன 'றாடர்' சாதனங்களுடன் கூடிய இக்கடற்படைத் தளத்தையும், ஞானி மடத்திலிருந்து கௌதாரிமுனை வரையுள்ள நிலப்பகுதியை ஆக்கிரமித்தபடி, சுற்றிவர 25 கி. மீ. நீளமான இராணுவ வேலியையும் கொண்டதாக, இக்கூட்டுத்தளம் அமைந்திருந்தது.

ஞானிமடத்திலிருந்த பெரிய கடற்படை முகாமுடன், மேலும் ஆறு இராணுவ முகாம்களையும் அவற்றுடன் கூடிய பல மினி முகாம்களையும் -நூற்றுக்கணக்கான காவல் அரண்களையும், இவை எல்லாவற்றையும் இணைத்த ஒரு நீண்ட இராணுவ வேலியையும் கொண்ட ஒரு பலமான தளமாக, பூநகரிக் கூட்டுத்தளம் விளங்கி வந்தது.

இந்தக் கூட்டுத்தளம் மாவீரர் நாளுக்கு முன்னர் புலிகளால் தாக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பை, சிங்களப் படைத்துறை ஏற்கனவே வெளியிட்டிருந்தது. ஆனாலும் ஒரு பூகம்பத்தைப் போல இவ்வளவு பிரமாண்டமானதாக அந்தத் தாக்குதல் அமையும் என்பதை, சிங்களப் படையினர் எண்ணியிருக்க மாட்டார்கள்.

1990 ஆம் ஆண்டு தீபாவளி தினத்தன்று, சிங்கள இராணுவம் வசாவிளான் பகுதியை நோக்கிப் படையெடுத்து வந்தது. "தீபாவளியை படையினர் வெடி கொளுத்திக் கொண்டாடினர்" என்று அந்த இராணுவ நடவடிக்கையை, ரஞ்சன் விஜேரத்னா சிலேடையாக விபரித்தார்.

ஆனால், 1993 ஆம் ஆண்டு, டாங்கிகளையும் நீருந்து விசைப் படகுகளையும் பிடித்து விளையாடி, கைப்பற்றப்பட்ட வெடிப் பொருட்களுக்குள் ஒளித்து விளையாடி, புலிகள் தீபாவளியைக் கொண்டாடினார்கள் என்ற செய்தியை அறிய, ரஞ்சன் விஜேயரத்ன இன்று உயிரோடு இல்லை!

பூநகரி கூட்டுத்தளத்தில் சிங்களப்படை சந்தித்த பேரிழப்பு, சிங்கள மக்களை அதிர்ச்சிக்கும் அச்சத்துக்கும் உள்ளாக்கியுள்ளது. அதேவேளை சிறீலங்கா அரசு மீதும் படைத்துறைத் தலைமை மீதும் சிங்கள மக்கள் கோபமடைந்துள்ளனர்.

"வருகின்ற ஜனவரிக்குள் / மார்ச்சுக்குள் எல்லாம் முடிந்துவிடும்; புலிகள் அழிக்கப்பட்டு விடுவார்கள்" என்ற எதிர்பார்ப்புடன் இருக்க வைக்கப்பட்ட சிங்கள மக்களுக்கு, பூநகரி படை முகாமின் கதி பேரிடியாக விழுந்துள்ளது.

சிங்களப்படையின் வரலாற்றில் இத்தகைய ஒரு பேரழிவை அது சந்தித்ததேயில்லை! அத்துடன் உலக இராணுவக் குறிப்பேடுகளில் ஒரு ஆவணமாகப் பொறிக்கும் அளவுக்கு, ஒரு 'கின்னஸ்' சாதனையாகவும் இப்பெருந்தாக்குதல் மாறிவிட்டது.

தாயக விடுதலைக்காகப் போராடும் ஒரு கெரில்லா இயக்கம், ஒரு அரச இராணுவ நிலை மீது கெரில்லா முறை மூலம் பெரும் தாக்குதல் நடாத்தி, இவ்வளவு தொகையில் அரச படைகளைக் கொன்று, அவர்களின் ஆயுதங்களைக் கைப்பற்றியதாக வரலாறே இல்லை. அந்த உலக சாதனையை புலிகள் இயக்கம் படைத்துள்ளது. இப்பெரும் சாதனை மூலம், விடுதலைப் போராட்டம் வெல்லப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையை தமிழீழ மக்களும் பெற்றுள்ளனர். ■

நன்றி:'விடுதலைப் புலிகள்'

### 'தவளை' இராணுவ நடவடிக்கை

பூநகரி கூட்டுப்படைத் தளம் மீதான தாக்குதலிற்கு 'ஒப்பறேசன் தவளை' என்று தலைவர் அவர்கள் பெயர் சூட்டியுள்ளார்.

இப்பெயர் சூட்டல், இத்தாக்குதல் நடவடிக்கைக்குரிய போருபாயத்தின் சாரத்தைத் துல்லியமாகவும், அழகாகவும் வெளிப்படுத்துகின்றது.

தரைவழி மூலமும், கடல்வழி மூலமும் சந்தடியின்றி நகர்ந்து சென்று, மிக வேகமாக குறித்த இலக்கைத் தாக்கி அழிப்பது தான் இப்பெரும் தாக்குதலின் போர்முறைத் திட்டமாகும். அதேவேளை, கடலிலும், தரையிலும் தனித்தனி சண்டைகளையும் கொண்ட ஒரு தாக்குதற் திட்டமாகும்.

ஏனெனில் கடற்படையையும், தரைப்படையையும் கொண்ட ஒரு பெரிய தளம்தான் பூநகரிக் கூட்டுப்படைத்தளம்

சுருக்கமாகச் சொன்னால், இது ஒரு ஈருடகத் தாக்குதல் ஆகும். இத்தாக்குதல் தொடங்கி முடியும்வரை நீருடாகவும் -நிலமூடாகவும், நீரிலும் -நிலத்திலும் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கும். அதேவேளை நீராகிலும் சரி, நிலமாகினும் சரி வேகம் மிக முக்கியம். எமது சூழலில் உள்ள ஈருடகப் பிராணிகளில், வேகத்தை நீரிலும் நிலத்திலும் ஏறக்குறைய சமனாகக் கொண்டது தவளைதான். அதேவேளை தவளையின் பாய்ச்சலும் -நீச்சலும், அது இரைகளைப் பிடித்துக் கொள்ளும் தன்மையும் பெரும்பாலும் குறிபிசகாதவைகளாக அமைந்திருக்கும்.

எனவேதான், ஈருடகத் தாக்குதல் திட்டத்தைக் கொண்ட பூநகரி கூட்டுத்தளம் மீதான தாக்குதலுக்கு, 'ஒப்பறேசன் தவளை' என்ற பொருத்தமான பெயரைத் தலைவர் அவர்கள் சூட்டினார்.



விடுதலைப் புலிகளின் பாய்ச்சலுக்குப் பின்னர் பூநகரி இராணுவத் தளம்

அகிம்சை வழியில்

## நம்பிக்கை இழக்கும் மலையகத் தமிழர்கள்

மலையகம் வாழ் தமிழர்கள் தமக்கு ஏற்படுத்தப்பட்டு வரும் சொல்லொணாத் துன்பங்களை எதிர்த்து இதுகால வரை அகிம்சை வழி எதிர்ப்புக்களையே காட்டி வந்தனர். ஆயினும் வகை தொகை இல்லாது மேற்கொள்ளப்படும் கைதுகளும், ஆயுத ஒடுக்குமுறைகளும் மலையக மக்களிடை அகிம்சை வழியில் நம்பிக்கை இழக்கவைத்து வாழ்வுக்கான போராட்டத்தை நடாத்தும் சூழ்நிலையைத் தோற்றுவித்து வருவதாக கொழும்புப் பத்திரிகைகளின் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் உசார்நிலையை அடைந்துள்ள சிறீலங்கா அரசாங்கம் அவசரம் அவசரமாக அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருகிறது. இதனை அவதானிக்கும் அவதானிகள் அந்த அப்பாவி மலையகத் தமிழ் மக்கள் மீதும் விரைவில் இராணுவ ஆக்கிரமிப்புக்களை சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்வதற்கான முன்னோடி நடவடிக்கையாகவே இவ்வடையாள அட்டை விநியோகத்தைக் கருதுகின்றனர். ■

# பூநகரி கூட்டுப்பண

# தமிழீழப் போரில் ட

சிறீலங்கா இராணுவ வரலாற்றில் மிக மோசமான பின்னடைவை ஏற்படுத்தியதாக வர்ணிக்கப்படும் பூநகரி -நாகதேவன்துறை கூட்டுப்படைத் தளம் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலானது தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்து ஒரு மைல்கல் என்றே கூறலாம். இதேவேளை பத்தாண்டு தமிழீழ விடுதலைப் போரில் ஓர் உக்கிரமானதும், கடுமையானதுமான தாக்குதல் என்றும் கூறலாம்.


1983 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு இணையான தாக்கத்தை இத்தாக்குதலானது அரசியலில் ஏற்படுத்தியுள்ள அதேவேளை இராணுவ வரலாற்றில் இதன் தாக்கம் அதைவிடப் பெரியதென்று கூறுவதில் தவறு எதுவும் இல்லை. அதாவது பத்து வருட ஆயுதப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியானது சிறீலங்கா இராணுவத்திற்கு வரலாற்றில் மிக மோசமான பின்னடைவு ஒன்றை பூநகரியில் ஏற்படுத்தியுள்ளது.

பூநகரி - நாகதேவன்துறை தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரும் எடுப்பிலான தாக்குதல், இத்தாக்குதலின் போது இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட உயிரிழப்பு, விடுதலைப்புலிகள் கைப்பற்றிய இராணுவத் தளபாடங்கள் என்ற வகையில் இத்தாக்குதலானது தமிழீழ விடுதலைப் போரில் பெரும் வரலாற்றுச் சமர்களில் ஒன்று என இடம் பெறக் கூடியதே ஆகும்.

இத்தாக்குதலின் போது சுமார் 800 -1000 ற்கும் இடைப்பட்ட சிறீலங்கா ஆயுதப் படையினர் கொல்லப்பட்டதாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. குறைந்தது 500 படையினர் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது. அதாவது நான்கு இலக்கங்களை எட்டியுள்ள ஆயுதப் படையினரின் இழப்பானது, ஒரு உள்நாட்டுப் போரில் அதிலும், இலங்கை போன்ற சிறிய தீவில் இடம்பெறும் போரில் ஒரு சாதாரண அளவல்ல.

இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பெரும் உயிரிழப்போடு, இரண்டு இராணுவ பட்டாலியன்களைச் சிதைத்தது மட்டுமல்ல பெருமளவு ஆயுதத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகளுக்கு கொடுத்துள்ளது. இது சுமார் 25 கோடி ரூபாய்க்கு மேற்பட்டதாகக் கருதப்படுகின்ற இவ் இராணுவத் தளபாடங்கள் சிறீலங்கா இராணுவத்தின் ஒரு பட்டாலியனுக்குத் தேவையான சகல விதமான ஆயுதத் தளபாடங்களையும் கொண்டது என அறிய முடிகின்றது. இதில் பலரக கனரக ஆயுதங்களும் அடங்கியுள்ளன.

இதைத்தவிர இத்தாக்குதலின் பின்னர் விடுதலைப் புலிகள் பூநகரி படைத் தளத்தை விட்டு வெளியேறியமையானது அவர்களின் போர் யுக்தியே எனக் கருத இடமுண்டு.



கடந்த காலத்திலும் அவர்கள் அவ்வாறே செய்துள்ளனர். பி. பி. சியின் முன்னாள் கொழும்பு செய்தியாளர் கிறிஸ் மொறிஸ், "விடுதலைப் புலிகள் எதைத் திட்டமிட்டனரோ அதை அடைந்துவிட்டார்கள். கடற்படை ராடர் நிலையம் அழிக்கப்பட்டு விட்டது. பல மாதங்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் அவர்கள் பெற்றுள்ளனர். எனவே அங்கிருக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இல்லை" எனக் குறிப்பிட்டுள்ளமை சரியான கணிப்பீடு என்றே கூறமுடியும்.



பூநகரி முகாமைத் தகர்த்த பின்னர் அங்கிருந்த கனரக ஆயுதமொன்றை எடுத்துச்செல்லும் போராளி ஒருவர்.

பூநகரி - நாகதேவன்துறை படைத்தளமானது -யாழ். குடாநாட்டின் முற்றுகைக்கென கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. அதாவது, யாழ். குடாநாட்டின் நுழைவாயிலில் சுமார் 25 கி. -மீற்றர் சுற்றளவு விஸ்தீரணத்தைக் கொண்டதாகவும், சிறீலங்கா இராணுவத்தின் இரு பட்டாலியன்களையும் கொண்டிருந்தது. அத்தோடு, கடல்வழி விநியோகப் பாதையையும் கொண்டிருந்தது.

இந்நிலையில், இம்முகாம் புலிகளின் தாக்குதலினால் அழிக்கப்பட்டமையானது, விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா இராணுவம் கடைப்பிடித்துவரும் யுத்த தந்திரோபாயங்களின் நம்பிக்கைத் தன்மை பற்றிய கேள்வியை எழுப்பியுள்ளது. மேலும் ஒரு இரவுத் தாக்குதலில் இரு பட்டாலியன்களைப் பலத்த சேதத்துக்கு உள்ளாக்கக் கூடிய பலத்தை விடுதலைப் புலிகள் பெற்றுள்ளமையானது இராணுவத் தரப்பில் அதிர்ச்சியூட்டும் அம்சமாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்து இத்தாக்குதலானது இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்தும் போர் யுக்தியில் வளர்ச்சியைக் காட்டும் அம்சமாகவே அமைந்ததெனலாம்.

சில மாதங்களுக்கு முன் (யூலையில்) மணலாற்றுப் பிரதேசத்தில் அவர்கள் மேற்கொண்ட 'இதய பூமி -1' நடவடிக்கை மூலம் அவர்கள் மண்கிண்டிமலை இராணுவ முகாமை நிர்மூலம் ஆக்கிய போர் யுக்தியின் விரிவாக்கமே பூநகரி -நாகதேவன்துறை படைத்தளத்தின் மீதான தாக்குதலின் வடிவமாகும். இது தலைவர் பிரபாகரன் அவர்கள் 1992 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வகுத்த புதிய போர் யுக்தியின் பரிணாம வளர்ச்சியே ஆகும்.

கடந்த காலத்தில் மாங்குளம், கொக்காவில் போன்ற முகாம்கள் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டபோது, வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நிலத்தால் சூழப்பட்ட தனித்துவமான முகாம்களுக்குப் பாதுகாப்பில்லை என்பது உணர்த்தப்பட்டிருந்தது. ஆனையிறவுச் சமரிலும் வெளிக்காட்டப்பட்டது. ஆயினும் பின்னர் கடல்வழித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் தற்போதைய பூநகரி -நாகதேவன்துறைப் படைத் தளத்தை விடுதலைப் புலிகள் அழித்ததானது கடல் வழித் தொடர்பு இருப்பினும் வடக்கில் இராணுவ முகாம்களை எவ்வாறு பாதுகாத்தல் என்பது குறித்த புதிய கேள்வி ஒன்றை சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் தோற்றுவித்துள்ளது.

இக்கேள்வி தனியாக, விடுதலைப் புலிகளால் ஒரு அதிரடித் தாக்குதல் ஒன்றினால் ஒரு முகாமை நிர்மூலம் ஆக்க முடியும் என்பதினாலும், பெருமளவு இராணுவத்தினரைக் கொன்றொழிக்க முடியும் என்பதினால் மட்டுமல்ல. தற்பொழுது கைமாறியுள்ள கனரக ஆயுதங்களினாலும் எழுந்தது என்றே கூறலாம். புலிகளின் பாவனையில் உள்ள ஆயுதங்களைவிட சில கனரக ஆயுதங்களை

பூநகரிப் ப
மீது புலிகள்
ண்ட தா
போது புலிகள
பற்றப்பட்ட
ஆர். பி. ஜி
கள் செலு
முதலாவது
எறிகணைகள்
பி. ஜி எறிகண
ண்ணிவெடிகள்,
. எம். எறிகண
கைக்குண்டுகள
ரவைகள் மற்று
பொருள்கள்
றின் ஒரு
இரண்டாவது
லும் காணலாம்

ஜெயா

## டத்தளம் தகர்ப்பு;

## திய பரிணாமம்!

பூநகரி -நாகதேவன்துறை தாக்குதலினால் புலிகள் பெற்றுக்கொண்டுள்ளனர் என்பதோடு, தமது பாவனையில் உள்ள கனரக ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கணிசமான

டத்தளம்
மேற்கொ
க்குதலின்
ல் கைப்
ஒருபகுதி
ரிகளை
ந்திகளை
த்திலும்,
ஆர். -
னகள், க
40 எம்
ணகள், -
, பலரக
வெடிப்
பனவற்
குதியை
படத்தி

ராஜ்



தொகையில் பெற்றுக் கொண்டும் உள்ளனர். இது வடக்கிலுள்ள முகாம்களின் பாதுகாப்புக்கு பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் என எதிர்பார்ப்பதில் தவறு ஏதும் இருப்பதாக இல்லை.

மேலும், இத் தாக்குதலில் கடற்புலிகளின் பங்கு கணிசமானதாகும். பூநகரி -நாகதேவன்துறை தளம் மீதான முதற் பலமான அடி கடற்புலிகளாலேயே கொடுக்கப்பட்டது. இத் தாக்குதல் கடற்கரும்புலித் தாக்குதலாக அமைந்தது. இத்தாக்குதலானது இப்படைத் தளத்தின் வீழ்ச்சிக்கு பெரிதும் உதவியது.

இதேவேளை இத்தாக்குதல் நடவடிக்கையில் கடல்புலிகள் தனியாக கடற்படை என்ற ரீதியில் அமையாது அமெரிக்காவின் புகழ்பெற்ற 'மரையன் போஸ்' போன்று கடலிலிருந்து தரையிறங்கும் தாக்குதல் படையணியாகவும் (Marine Force) செயற்பட்டனர். அதாவது கடற்புலிகளின் செயற்பாடு கடலிலும் தரையிலுமாக இருந்தது. சிறீலங்காக் கடற்படையினருக்கு எதிராகக் கடலில் செயற்பட்ட கடற்புலிகள் கரையோரப் பகுதியில் தரையிறங்கியும் போரிட்டனர்.

மூன்று நாள் யுத்தத்தின் பின் விடுதலைப் புலிகள் பூநகரி -நாகதேவன்துறை படைத் தளத்தில் இருந்து வெளியேறியிருப்பினும், இத்தாக்குதலின் மூலம் யாழ். கடல் நீரேரி கடற்புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது என்றே கூறலாம். இது நாகதேவன்துறையை கடற்படையினர் இழந்ததினால் மட்டுமல்ல. இத்தாக்குதலில் கடற்புலிகள் காட்டிய போரிடும் ஆற்றலும், இவ் யுத்தத்தின் மூலம் கடற்படையினரிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ள கடற்படைத் தளபாடங்களும் இதற்கு உதவுபவையாக உள்ளன.

அதாவது, இத்தாக்குதலின் மூலம் ஆழம் குறைந்த கடற்பரப்பில் -குறிப்பாக கரையோரப் பகுதியில் சிறீலங்காக் கடற்படையினரின் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தும் நிலையை அடைந்துள்ளமை வெளிப்படை. இதன் மூலம், கொழும்பில் கடந்த வருட இறுதியில் கொல்லப்பட்ட அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ, கரையோரங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவென வகுத்துக் கொடுத்த போர் யுக்தி புலிகளால் உடைத்தெறியப்பட்டுள்ளது எனக் கூறமுடியும். அதாவது, நீருந்து விசைப்படகுகளால் ஆழம் குறைந்த கரையோரங்களையும் கட்டுப்படுத்துதல் என்பது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது முகாம்களின் பாதுகாப்பு என்ற ரீதியில் சிறீலங்கா ஆயுதப் படையினருக்கு சவாலாக எழுந்துள்ள விடயம் ஆகும். அதாவது, அவசரமான வேளையில் முகாமில் உள்ளோருக்கு உதவியாகத் தரையிறக்குதல் தொடர்பான விடயம் பெரும் கேள்விக்குறியாக மாறிவிட்டது.

இந்நிலையில் இராணுவத்தை தரையிறக்க கடற்படையினர் தீவிர அக்கறை காட்டியபோதும் விடுதலைப் புலிகள் பூநகரிப் பகுதியில் இருந்து வெளியேறும் வரை அது சாத்தியமாகவில்லை.

இத் தரையிறக்க முயற்சியை முறியடித்ததில் கடற்புலிகளின் பங்கு கணிசமானதாகும். அதாவது, மோதல் இடம்பெற்ற மூன்று தினங்களும் பூநகரிப் பிரதேசத்தைப் புலிகள் காலாட்படைப் பிரிவுகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது போன்று யாழ். கடல் நீரேரியையும், கல்முனையில் இருந்து பள்ளிக்குடா வரையிலுமான மேற்குக் கரையோரத்தையும் கடற்புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். இதுவே சிறீலங்காப் படையினரின் தரையிறக்கல் முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததற்கான காரணமாக அமைந்தது.



பூநகரி முகாம் தகர்ப்பின் போது புலிகளால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்ட ரீ. 55 ரக டாங்கி.


அதாவது, ஆனையிறவுப் பெரும் சமர் இடம்பெற்று சுமார் ஒன்றரை வருட காலத்திற்குள் விடுதலைப் புலிகளின், முகாம்கள் மீதான தாக்குதல் யுக்தி புதியதொரு பரிணாமத்தைப் பெற்றுவிட்டதை பூநகரி -நாகதேவன்துறை மீதான தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது. இது விடுதலைப் புலிகளின் பலத்தை அதிகரித்துள்ளதோடு வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களின் பாதுகாப்புக் குறித்து சிறீலங்கா இராணுவத்தினருக்கு அச்சுறுத்தலாகவும் மாறியுள்ளது.

ஆனையிறவு பெரும்சமர் நடந்த வேளை சிறீலங்கா கடற்படை ஆற்றிய பங்கு தற்பொழுது கடற்புலிகளின் பிரவேசத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் ஆழம் குறைந்த கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படை தனது கட்டுப்பாட்டை இழந்துள்ள நிலையில் ஆபத்துக்கு உதவும் ஒரு தரையிறக்கம் இனிக் கேள்விக்குரியதாகவே இருக்கும். இதன் காரணமாக ஆழம் குறைந்த யாழ். கடல் நீரேரிப் பரப்பை விநியோக வழியாக கொள்வதும் ஒரு முகாமின் பாதுகாப்பு குறித்து இராணுவத் தரப்பு பெரியளவில் சிந்திக்க வேண்டிவரும்.

சிறீலங்கா ஆயுதப்படையினர் குறிப்பாக விமானப்படை தற்போது ரஸ்யத் தயாரிப்பான எம் 17 ஏ ரக உலங்குவானூர்திகளைக் கொண்டிருப்பினும் பூநகரித் தாக்குதலின் போது துருப்பினரைத் தரையிறக்கும் முயற்சி எதையும் வெற்றிகரமாக மேற்கொள்ள முடியவில்லை. இதனால் வரும் ஆபத்தை ஏற்கனவே விமானப்படையினர் உணர்ந்திருந்தமையினாலேயே இம்முயற்சி பெரிதும் அக்கறை காட்டவில்லை போல் உள்ளது.

இந்நிலையானது எந்த ஒரு முகாமும் தனித்து விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாக உருவாக்கப்பட்டால் அன்றி, வடக்கில் அதன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது கடினமாகவே இருக்கும் என்ற நிலையை உருவாக்கியுள்ளது. ஆனால், அவ்வாறு அமையும் தளங்கள் இரண்டு பட்டாலியன்களுக்கு மேல் இருக்கும் பட்சத்திலேயே புலிகளின் அதிரடித் தாக்குதலில் இருந்து தப்பிக்க முடியும். அதாவது இரண்டிற்கும் மேற்பட்ட பட்டாலியன்கள் எந்த முகாமிலும் நிறுத்தப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தை விடுதலைப் புலிகள் பூநகரித் தாக்குதல் மூலம் இராணுவத்திற்கு உருவாக்கியுள்ளனர்.

ஆனால், இதனை பகலில் தூங்கி இரவில் விழித்திருக்குமாறு இராணுவத்திற்கு ஆலோசனை கூறும் சிறீலங்காவின் ஜனாதிபதியும், முப்படைகளின் தளபதியும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்க போன்றோரால் புரிந்து கொள்ள முடியுமா என்பதே இன்றுள்ள கேள்வி. ■




**அத்தியாயம் - 1**

இது ஒரு புதிய போர்ப்பரணி !
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

**1990,** கார்த்திகை 9 ஆம் திகதி.

பனிக்காற்று ஊ ஊ என வேகமாக வீசி அடித்துக் கொண்டிருந்தது. பால்போலத் தெறித்த வெண்ணிலவை முகில் கூட்டங்கள் வெட்டியோடின. விரைவாக அவற்றைக் கலைத்துவிட்டு நிலவு வெளியே வந்து சிரித்தது. கிழக்கு வான ஓரத்தில் கொஞ்சம் கருமுகில்கள் தொட்டந்தொட்டமாக சிதறிக் கிடந்தன. நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தூங்கித் தூங்கி விழித்துக் கொண்டிருந்தன. வானில் இடையிடையே இராக் குருவிகள் பறந்தன. ஆட்காட்டி ஒன்று அவலமாய்க் கத்தியபடி கடந்துபோனது.

"உது கத்துறது கூடாது என்கிறவ. எங்கட அப்பு நெடுகச் சொல்லுவார். அவற்ற தேப்பன் வண்டிலில வெளிக்கிடேக்க உது குறுக்கால போனதாம். அப்பவும் ஆத்தை சொல்லச் சொல்ல நல்ல வெறியில வெளிக்கிட்டுப் போனவராம். விடியக் காத்தால பக்கத்து ஊராக்கள் சவத்தைத் தான் கொண்டு வந்தவையாம். ஏதோ வண்டிலால இழுத்துப் போட்டு அடிச்சிட்டுதாம்" என்று வலு 'சீரியசாய்' சொன்னான் வசந்தன்.

"நீ ஒரு பேயனெண்டு தெரிஞ்சு கொப்பர் நல்லா கயிறு விட்டிருக்கிறார். நீயும் கேட்டுக் கொண்டு வந்தனியே. எங்களுக்கு சொன்னமாதிரி வேறாக்களுக்கு சொல்லிப் போடாத. பிறகு உருப்படியா வரமாட்டாய்" என வசந்தனைச் சீண்டினான் இதயன்.

"டேய், அவன் எனக்குச் சொன்னவன். நீ ஏன் கத்திறாய்" என இடையில் வெட்டினேன் நான். வசந் கையில் எடுத்த தடிக்குச்சியால் இதயனுக்கு ஒரு குத்து விட்டுத்தான் அடங்கினான்.

உழவியந்திரம், வெளியை (வெட்டையை) விட்டுக் காட்டுப் பாதையில் இறங்கியது. எல்லோரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டார்கள். "இனி கொஞ்சத் தூரம் தண்டவாளத்திலதான் போகும்." றைவர் சேது கூறிச் சிரிப்பது கேட்டது.

"இவன் ஒரு மூதேவி. இப்படி இடங்களில வேணுமெண்டு ஓடுவான். நாங்கள் கத்திறதைப் பாத்தா இவனுக்கு சந்தோசம் போல." தன் இயலாமையைக் கொட்டினான் வசந்தன்.

காட்டுப் பாதை என்பது காட்டுக்குள்ளே மரங்களை வெட்டி, பாதைபோல அமைத்து, பின் நீரில் அள்ளுப்படாமல் மரக்கட்டைகளை வெட்டி சிலிப்பர் கட்டைபோல வரிசையாய் அடுக்கி, பின்னர் மண்போட்டு இறுக்குவதே. இது வருடா வருடம் மழை முடிந்தவுடன் சீரமைக்கப்படும். கேட்டவுடன் சுலபமாகக் கூறிவிடலாமே தவிர, இது மிகக் கடினமான வேலை. காட்டை வெட்டிச் சீராக்குவதே பெரும்பாடு. பின்பு மரங்களை சிலிப்பர் கட்டை போல துண்டு துண்டாக்கி சுமந்து வரவேண்டும். பின், சிவந்த மண்ணைக் குன்றாய் குவிந்திருக்குமிடங்களில் வெட்டி அள்ளி, கடகங்களில் சுமந்து வரவேண்டும். இவ்வளவுக்கும் கோல்சரும் ஆயுதமும் உடலில்தான் இருக்கும். வியர்வையில் எல்லாப் போராளிகளும் குளித்து விடுவார்கள். அனல் தெறிக்கும் வெயிலில் இந்த வேலை செய்வதென்றால், மிகக் கடினம். "என்ன செய்யிறது, எங்கட றோட்டு நாங்கள் தானே செய்யோணும்" எனத் 'தளபதி' உற்சாகமூட்டுவார். அவர்கூட பல இடங்களில் தானும் நின்று செய்வார்.

இளம்போராளிகள் தாங்கள் வெட்டிய வீதியைத் துப்புரவு செய்வார்கள். அந்த நேரத்தில் கூட நண்பர்களை வம்புக்கிழுக்கும் இதயன் மற்றவர்களைச் சீண்டுவான். சிலவேளை இவனை யாராவது மண்ணால் குளிப்பாட்டி விடுவார்கள். வியர்வைச் சேற்றில் மண்பட பார்ப்பதற்கு பரிதாபமாக இருக்கும்.

'டடேங் டாங்' என உழவியந்திரம் பெரிதாய் குலுங்கியது.

"ஐயோ! ஏன்ரா இப்படி ஓடுகிறாய்? மெல்லமாப் போவன்" என வசந்தன் கேட்பதும் சேது அட்டகாசமாய் சிரிப்பதும் தெளிவாகக் கேட்டது.

"உவன் சிரிக்கிற சிரிப்பைப் பாத்தா இண்டைக்கு பிரட்டி எடுப்பான் போல கிடக்குது" என்று இதயன் எரிச்சலுடன் கூறினான்.

எம்மைத் தொடர்ந்து வரும் உழவியந்திரங்கள் மிகத் தொலைவில் வருவது தெரிந்தது. டேவிட் அண்ணர் ஓட்டிவருவதற்கு, ஒற்றை லைற்தான் எரிந்தது. அது தூரத்தில் தெரிந்தது.

பெரிய பெரிய பாலை வீரை மரங்களைப் பார்க்கையில் ஏனோ துக்கமாக இருந்தது. "எங்களை விட்டு எங்க போறியள்" எனக் கேட்பதைப் போல அவை காற்றுக்கு அசைந்து இரைந்தன.

'எவ்வளவு நல்ல காடு, தாய் மாதிரி இவ்வளவு காலமும் எங்களைக் காத்தது இதுதானே. இனி எப்ப வரப்போறம்' என மனதில் எண்ணிக் கொண்டேன். ஆவலை அடக்க முடியாமல் கையை உயர்த்தி மரங்களிற்கு "டாட்டா" காட்டினேன்.

"டேய் என்னடா செய்யிறாய்?" என வசந் கேட்டான். ரைக்ரர் குலுக்கி மண்டை பிசகிட்டுதோ என எண்ணினான் போலும்!

"சும்மாதான்" என்று, விழியில் திரையிட்ட நீரைத் தட்டிவிட்டேன். முத்தாய் உருண்டு அது செம்மண்ணில் விழுந்தது -எமது வியர்வை ஊறிய மண்ணில். இதயன் இப்போது லைற்றைப் பிடித்தபடி நித்திரை தூங்கினான்.

நான் கோல்சரை கொஞ்சம் தளர்த்திவிட்டு, ரி. 81 ஐ உயர்த்திப் பிடித்துக் கொண்டேன். முகில்கள் வேகமாய் தலைக்கு மேல் விரைந்தன.

காட்டின் ஆரம்ப முகாமில் ஒரு கணம் குலுங்கி நின்ற ரைக்ரரை, சலாம் சென்றியுடன் கதைத்துவிட்டு வேகமாக வெளியே எடுத்தான். ரைக்ரர் மணல் வெளியூடாகப் பாயத் தொடங்கியது. உற்சாகமாக ஓடினான்.

"சலாம், ரைக்ரரை நிற்பாட்டு. வசந்தன் கீழே விழுந்திட்டான். என்ன கண்டறியாத ஓட்டம் ஓடுறாய், பேயா!" எனத் திட்டிக் கொண்டு இதயன் இறங்கி, முன் பக்கமாக ஓடினான். சலாம் நல்லாப் பயந்து போனான். என்னடா, என்னடா எனக் கேட்பதற்குள் ரைக்ரரின் 'மட்காட்டில்' ஏறிய இதயன், "இனி எடடா" என்றான். சலாமிற்கு நொடியில் விளங்கியது, இவன் தன்னை ஏமாற்றிவிட்டான் என்று. இல்லாவிட்டால் சலாமாவது நிற்பாட்டி ஏறு என்று சொல்லுறதாவது. தோல்வியுடன் சலாம் சிரித்தபடி அக்சிலேற்றரை ஊன்றி மிதிக்க ரைக்ரர் ஜீப் மாதிரிப் பாய்ந்தது.

"இனி இவங்கள் இரண்டு பேரும் சேர்ந்து எங்கள கொல்லப் போறாங்கள்" என்று வசந்த் ஆற்றாமையால் எரிந்தான். தன் பெயரைப் பாவித்த கோபம் அவனுக்கு இருந்தது. தூரத்தில் நாயாற்றுப் பாலம் பெரிய மிருகம் போலக் குந்தியிருந்தது.

"இந்தியன் இருக்கேக்கை மச்சான், இதிலையெல்லாம் வர ஏலாது. மண்டை சிதறும்!" என்று பழையதை நினைவு கூர்ந்தான் வசந்தன்.

"இவ்விடத்திலதான் ஒருக்கா நல்லாக் குடுத்தனாங்கள்" என்று ஞாபகப்படுத்தினேன்.

"ஏராளமான ஆமி செத்ததெல்லே?" என வினாவாக எழுப்பினான்.

"ஓ! 26 ஆமி செத்தது. 21 ஆயுதம் எடுத்தனாங்கள். கால்கஸ்ரோ, பிறன் எல்லாம் எடுத்தது" என்று நினைவு கூர்ந்தேன்.

ரைக்ரர் வீதியில் ஏற முன், நீர்க் கிடங்கினுள் விட்டு எடுத்தான் சலாம். என்னிலும், வசந்திலும் அதன் பெரிய ரயர், நீரை வாரி எறிந்தது! சலாம் சிரிக்க எனக்கு உண்மையில் கோபம் வந்தது. "விசரா, ரைபிளல்லே நனைஞ்சு போச்சு" என்று கோபத்தைக் கொட்டினேன். "சரி, நான் இனி அப்படி ஓடேல்ல. " என்று சலாம் சொன்னான். வாய்க்குள் போன நீரைத் துப்பியபடி வசந் இருந்தான்.

பெரிய கருமுகில் ஒன்று சந்திரனை திரையிட்டு மறைத்தது. வெள்ளிகள் கூட குறைந்துவிட்டன. வானவெளி வெறிச்சோடிக் கிடந்தது. "அங்கற்றா" என்று வசந் காட்டினான். ஒரு வெள்ளி பால்வெளியில் ஓடி எரிந்து மறைந்தது. என்னடா அது என வசந்தன் வாயைக் கிண்டினேன்.

"மச்சான், உதைத்தான் வெள்ளி விழுகிறது என்கிறவை. பார்க்கக் கூடாதாம். பாத்தா உடனே பால்மரத்தைப் பாக்க வேணுமாம்" என்று சுழல விட்டான் கண்ணை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை மரமேயில்லை. "உதைப் பார்த்தா ஆராவதுக்கும் என்னமும் நடக்கும் எண்டு அய்யா சொல்லுறவர்" என்றான் அவன். கிராமத்தில் வளர்ந்தவன். அந்த ஆசாரங்கள் இருக்கத்தானே செய்யும்.

"உதெல்லாம் வெறும் கட்டுக்கதையடா. அது வெள்ளியில்லை. ஆகாயக் கல் எண்டு சொல்லுறது." என சிந்து விளக்கம் கூற, அவன் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. சரி கதையை விடு என பேச்சை மாற்றினேன்.

என்னவென்று கதை மாறியது என எனக்குத் தெரியவில்லை. எப்படியோ வீட்டுக்கதை வந்து விட்டது.

சலாமின் வேகம் குறைந்து ரைக்ரர் நாயாற்றுப் பாலத்தில் இரைச்சலுடன் ஏறியது. நாங்கள் இருக்கும் பெட்டி போன்ற கோபுர ஆயுதம், மிகப் பாரமானது. இழுப்பது கடினம். அதனால் தான் ரைக்ரர் கஸ்டப்பட்டது. ஏறியிறங்கவும் டேவிட் அண்ணரின் ரைக்ரர் வளைவு ஒன்றில் திரும்புவது தெரிந்தது.

சகபோராளிதானே என்று என்னிடம் எல்லாவற்றையும் கூறுவான் வசந்தன்.

"மச்சான் நான் இப்படி இருக்கிறன், முந்தின கூத்துக்களைச் சொன்னால் சிரிப்பாய். வீட்ட தெரியுந்தானே. நானும், அம்மா, அப்பர், அப்பு மற்ற இரண்டு தம்பியும் மூன்று அக்காவும். இது தான் மச்சான் என்ர குடும்பம்.

நான் பிறந்து தெரியிறதில இருந்து, அப்பர் குடிக்கிறது நல்ல ஞாபகம். எந்த நாளும் குடிக்காட்டிலும், கிழமையில் ஒரு நாளைக்கு சின்னத்தம்பியின்ர முட்டியோட வருவார். முட்டியோட புளாவில வாத்துக் குடிக்கிறதெண்டால் வலு சந்தோசமாம். ரண்டு, மூண்டு புளாக் கள்ளுக் குடிப்பார்."

"இனிக் குடிக்க மாட்டன்" என சத்தியம் செய்துவிட்டும், புலவிற்குப் போவார்." இவ்விதம் தனது இளம்பராயக் கதைகளைக் கூறிக்கொண்டு, "அந்தக் காலத்தை மறக்கேலாதடா" என வசந்தனின் பெருமூச்சு எழுந்தது.

"இத்தனை வருசமாய் மனதுக்கை அடக்கி வைத்திருந்தும், இண்டைக்கு ஏனோ சொல்லோணும் மாதிரிக் கிடந்தது. அது தான் சொன்னனான்."

"அட, இவ்வளவு முசுப்பாத்தியைச் சொல்லிவிட்டு ஏன் அழுகிறாய்?" என்றேன். எனக்கு உண்மையில் விளங்கவில்லை.

"அதில்லை மச்சான். பிறகுதானேடா பிரச்சினை வந்தது. அப்புக்கடா கான்சர் வந்திட்டுது. 'புகையிலைத் தோட்டத்தில் ஆயுதம் தாட்டுக் கிடந்தது' எனச் சொல்லி ஆமி வந்து அப்பரைக் கொண்டு போட்டுதடா. பிறகு ஆறேழு நாளையால காதுக்கடுக்கனை வச்சுத்தான் அடையாளம் பிடிச்சம். ரயர் போட்டு எரிச்சிட்டாங்கள்." எங்கோ பார்த்துக் கூறினான்.

"பிறகு நான் இங்க வந்திட்டன். இந்திய ஆமி சுட்டு அம்மாவுக்கு இடுப்புக்கு கீழ வழங்காது. அக்காமார்தான் ஏதோ புலவில வேலை செய்து வாழ்கினம்".

ரைக்ரர் சில்லு ஒன்று துள்ளித் துள்ளி ஓடியது.

"டேய் சலாம், ஒருக்கா நிற்பாட்டு. டயர் பழுதாப் போட்டுது போல" என்றேன். குலுக்கலுடன் ரைக்ரர் நின்றது.

"ரயர் நட்டை உடைச்சுப் போட்டுது. எட்டு நட்டில அஞ்சுதான் நிற்குது; சிலோவாப் போகலாம்" என்று கூறி, கியரை மாற்றினான்.

அது ஊரத் தொடங்கியது.

"இதிலையெல்லாம் முந்தித் தமிழ்ச்சனம் தான் இருந்தது. இப்ப எல்லாத்தையும் குண்டு போட்டு அழிச்சிப் போட்டான்கள். எவ்வளவு வள்ளங்கள் வலையள எரிச்சுப் பொசுக்கினான்கள். இந்தச் சனம் எல்லாம் எழுந்து எங்கோ போட்டுதுகள். கொஞ்சச் சனம்தான் இருக்குதுகள். எல்லாச் சனமும் நல்ல ஆதரவு மட்டும்" என்று வசந்தன் கூறினான்.

தூரத்தே கைவிடப்பட்ட குடிசை வீடுகள் பாழடைந்து போய் கிடுகுகள் எல்லாம் இற்றுப்

தொடர்ச்சி 11ம் பக்கம் ....

# போர் உலா..

போய்க் கிடந்தன. சில கொட்டில்கள் குப்புற வீழ்ந்து கிடந்தன. இரண்டொரு கிடுகு மட்டைகள் காற்றில் ஆடுவது, நிலவிற்கு உயிரினங்கள் அசைவது போலத் தென்பட்டது.

"அங்க பார்" என்று வசந்தன் காட்டினான்.

"உதுதான் சின்னச் சின்ன நீர்த் தேக்கங்களுக்குள் மீன் பிடிக்கிற வழி. கடலுக்கதான் போக ஏலாது என்றால் வயிற்றுக்கு என்ன செய்யிறது?"

தேக்கமான நீரின் கரையில் தீப்பந்தங்களை பெரிதாகக் கொளுத்தி வைத்திருந்தார்கள். திடீரென ஒருவர் அவ்விடத்தில் வலையை வீசினார். இன்னொருவர் வலையை இழுத்துப் போட்டார். தூரப் போகப் போக ஆட்கள் மறைய ஆரம்பித்தனர். அவர்களின் ஏக்கமான முகங்கள் மட்டும் தெளிவாக உள்ளத்தில் பதிந்துவிட்டன. குடும்பமே திரண்டு நின்று இவ்விதம் மீன் பிடிக்குது என்றால் என்ன வறுமை என, என்னுள் உணர்ந்து கொண்டேன்.

வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்த வசந்தன், "சலாம் லைற்றை நிற்பாட்டு" என்று கத்தினான். இரண்டாம் முறையும் கத்த சலாம் லைற்றை அணைத்தான்.

"என்னடாப்பா கெலியே, கவனமாப் பார். பின்னால் வாறவன்களுக்கு சிக்னல் காட்டுங்கோ" என்றான். நான் ரோச்லைற்றை எடுத்து சங்கேதமாக மும்முறை காட்ட வரிசையான 5 ரைக்ரர்களும் இருட்டாகி நின்றன.

வானத்தில் நிலவைக் கடந்து ஒரு கெலி சென்றது. விளக்குகள் அணைந்ததை அவதானித்தான் போலும். சடுதியாக மடக்கி வெட்டி சுற்றத் தொடங்கினான். அவரவர் ஆயுதங்களையும் பொருட்களையும் எடுத்துக்கொண்டு வீதியைக் கடந்து ஓடினோம். எல்லோரையும் நிலையெடுக்கக் கூறினார் டேவிட் அண்ணர். நான் வோக்கி டோக்கியை அலைவரிசையில் விட்டு, பின் ஜி. பி.-எம். ஜி. வைத்திருந்த டாவினை அழைத்துக் கொண்டு ஒரு மரத்தின் பின் சென்றேன்.

இரண்டாவது தடவை சுற்றிய பின் நல்லாகச் சரியத் தொடங்கி, வீதியை நோக்கி 50 கலிபரை இயக்கத் தொடங்கினான் எதிரி. ரேசர் ரவைகள் சீறிப் பாய்ந்தன. சில ரவைகள் தரையில் பட்டு வெடித்தன. வோக்கியில் டேவிட் அண்ணா கட்டளைகள் பிறப்பிக்க ஆரம்பித்தார். "அவன் கீழ செய்யப் பார்த்தா பெரிசால நூறு கொடு" என்றார்.

திடீரென்று 'பம்' என்ற சத்தத்துடன் ஏதோ இரைந்தது. "மச்சான், பரா அடிச்சிட்டான், படுங்கோடா. இண்டைக்கு கண்டானெண்டால் புக்கைதான். ஏலுமெண்டால் முன்னால செல்லுங்கோ" என்றார் டேவிட். மண்கும்பிக்குப் பின்னால் நின்ற சலாம், ரைக்ரரை நோக்கி ஓடினான். இடையே 5" செல்களை கெலி வீசியது. டும்டும் என புகை எழுந்து நிலம் அதிர்ந்தது. சலாம் ரைக்ரரை இயக்கி அக்சிலேட்டரை மிதித்தான். பரா வெளிச்சத்தில் கெலி பதியத் தொடங்கியது. ரைக்ரருக்குப் பின்புறமாக வீதி மேலாக சென்றால் இலகுவாக 5" செல்லை வீசலாம் என எண்ணியதாய் வீதியில் நன்றாய்ப் பதிந்தது.

"டாவின் அலேட்" எனக் கத்தியபடி நான் உத்தரவை வழங்க, ஜி. பி. எம். ஜி. நெருப்பைக் கக்க தொடங்கியது. எதிரிகள் இதை எதிர்பார்க்கவில்லை. சடுதியாய் மேலெழுந்து 50 கலிபரால் அடித்தபடியே மறைந்தது. 'முறையாய் கொழுவிவிட்டுது போல' என்று சந்தோசமாய் சிரித்தான் நேசன். ஜி. பி. எம். ஜி. பரல் சிவந்து கிடந்தது. ரோச் லைற்றை அடித்து லிங்குகளைப் பொறுக்க ஆரம்பித்தான். 'நாம் ஒரு நாட்டு இராணுவமல்ல, போராளிகள். எமக்கு உதவிகள் குறைவு. நாம் மிக சிக்கனமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு ரவையும் ஒவ்வொரு ஆக்கிரமிப்பாளனைக் கொல்ல வேண்டும். வீணான ஆயுத பாவனையைத் தவிர்க்க வேண்டும்' என்று சொல்லும் செல்வராஜா மாஸ்டரின் நினைவு வந்தது.

ரைக்ரர் பயணம் ஆரம்பமானது. எல்லோரும் வானை நோக்கி தயாராக இருந்தார்கள். போன கெலி மீண்டும் வரலாம் அல்லது வேறுவகை எதிர்ப்புகளைத் தரமுயல்வார்கள் என்று எண்ணியிருந்தோம். சில்லு துள்ளித் துள்ளிச் சென்றது. டெலிக்கா வான் ஒன்று வேகமாய் வந்து நின்றது. ரைக்ரர் சைற்றுக்காக ஒதுங்கியது. வானில் இடப்புறமாக அரசியல் பொறுப்பாளர் ரமேஸ் அப்பா இருந்தார். என்னமாதிரி கெலி அடி என்று கேட்டேன். அவன் போட்ட 5" ஒன்று விழுந்து வெடித்து மீன்பிடித்துக் கொண்டிருந்த குடும்பத்தில் ஒரு ஆள் சரி; 2 பேருக்கு காயம் என்றவர், வேகமாய் பறந்தார். எமது அரசியல் பொறுப்பாளர்களையும் அன்றைய மூத்த அரசியல்வாதிகளையும் ஒருகணம் நெஞ்சில் எண்ணிக்கொண்டேன். அந்த நீர்த்தேக்கத்தில் மீன்பிடித்து நின்ற குடும்பம் மனதில் வந்து மறைந்தது விழியில் வடிந்த துளி நீர் ரைபிளின் மகசீனில் பட்டுத் தெறித்தது. அலட்சியமாய் உதறிய பின், வீதியைப் பார்த்தேன்.

அலம்பிலில் பெரும் தென்னந் தோப்புகள் எங்கும் பரவிக் கிடந்தன. நல்ல வளமான பூமி. இத் தென்னைகளால் வரும் வருமானமே எமக்குப் பெருமளவு போதுமானதாக அமையும் என எண்ணினேன். பெரிய குடை போன்ற தென்னைகள் சுமக்க முடியாமல் தேங்காய்களைச் சுமந்தவண்ணம். காற்றில் தலைவிரிகோலமாகத் தள்ளாடுவது பார்க்கப் பயமாக இருந்தது.

இடையிடையே பெரும் பெரும் விருட்சங்கள், மலைகள் ஆகாயத்தில் தொங்குவதாய் தள்ளாடி நின்றன. தண்ணிமுறிப்பு நீர், கால்வாய்களை நிறைத்துக்கொண்டு பாய்ந்தது. அந்த அலைகள் கற்களைத் தாண்டிக் குதிக்கையில் நிலாவொளியில் பட்டு முத்துமுத்தாய்த் தெறித்தன. நீர்க்கோளங்கள் மோதிமோதிச் சிதறின. வாய்க்கால் கரைகளில் முடி வளர்ந்திருந்த நீர்ச்செடிகள் குலுங்குவது தனிக்காட்சியாய் இருந்தது.

அலம்பில் சந்தியால் குமுழமுனை வீதியில் ரைக்ரர் திரும்பியது. "மச்சான் றோட்டுச் சரியில்லை பார்த்து ஓடு. இல்லாட்டிப் பிரட்டிப் போடும்" என்ற வசந்தன், பின்புறமாய்த் திரும்பி வானத்தைப் பார்த்தான். முகிலை நீக்கிய நிலா எங்கும் பரந்து கொண்டிருந்தது.

குமுழமுனை வீதியின் மருங்குகள் தோறும் பெரிய வயல் நிலங்கள் விதைக்கப்பட்டு, இளந்தளிர் தள்ளி வயலே நிரம்பி வழிந்தது. களனிகள் அருகே கால்வாய்களில் நீர் நெளிந்து ஓடியது. அது தண்ணிமுறிப்பு நீர். வாய்க்கால் வழியோடி வயலுக்குப் பாய்கிறது. வயலுக்கு மேலாக எங்களையும் கடந்து, அவலமாகக் கத்தியபடி ஆள் காட்டிக் குருவி பறக்கிறது. இதற்கு உறக்கமே இல்லையா? சிறு வயதில் தாத்தா கூறுவார் "உந்த ஆட்காட்டி தம்பி, இனி உயிரோட இராது. அதின்ர சோடியைத் தேடித்தான் கத்தும். பிறகு எங்கேனும் விழுந்து சாகும்" என்பார். அப்பிடியென்றால் உவ்வளவு ஆட்காட்டியும் என்னென்று உயிரோட திரியுது என ஒருநாளும் நான் கேட்கேல்ல. அட கேட்டு மடக்கியிருக்கலாம் என மனம் குழந்தையாய் எண்ணியது.

தூரத்தே ஆறேழு பனைகள் தனித்து நின்றன,

நேரம் 11. 52 இரவு, எனக் கடிகாரம் காட்டியது. எப்படியும் போய்ச் சேர இரண்டு நாளாவது வேணும் என்று எண்ணினேன். வசந்தன் ரி. 56 ஐ தடவியபடி ஏதோ யோசனையில் இருந்தான்.

குமுழமுனை நேர்வீதி சென்று திரும்பும் வளைவு. அதன் ஓரத்தே நாவலொன்று சாய்ந்து வீதியில் வேர் புடைத்துப் போய் இருந்தது. சலாம் இரண்டு கைகளையும் ஸ்ரேறிங்கில் வைத்து லாவகமாகத் திருப்பினான். அக்கறையாய் அவதானமாய்த் திருப்பினான். எத்தனையோ தடவை திருப்பிப் பழக்கப்பட்டவன் அவன். உடம்பும் சேர்ந்து திரும்பியது. அட அவ்வளவு பெரிய முடக்கோ, இப்படித் திருப்பிறான். சலாமின் உடலில் ஏதோ அவசரம், ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டதாய். வியர்த்து விறுவிறுத்து பேயறைந்ததாய்க் கத்தினான். "டேய் பின்னாலை குதியுங்கோடா! ஸ்ரேறிங் றொட் உடைத்துப் போட்டுது!"

பின்னிருந்த நான் ஒரே தாவலாய் தாவினேன். தாவும் போதே திரும்பிப் பார்த்தபோது வசந்தன் நிக்கிறா காங்கினான். இல்லையில்லை, துரோணர் போல் நிஸ்டையில் இருந்தானோ?

"டேய் வசந், டேய் குதியடா அடிபடப் போகுது!"

உடலிலுள்ள சக்தியெல்லாம் திரட்டி அப்படியே தொண்டைக்குக் கொண்டுவந்து குரல் கொடுத்துக் கத்தினேன். காட்டுக் கத்தலாய் அட்டதிக்கும் அதிர்ந்தது. பாலைமரமும், வீரைமரமும் ஒருமுறை அசைந்தன. நிலவு ஒருமுறை அழுதது. மரத்திலிருந்த பறவைகள் கத்தியபடி கலைந்தன. பட்டியில் நின்ற பசுக்கள் ஒருமுறை அம்மா என்றன. ஆட்காட்டி, ஒன்றை ஒன்று துரத்திக் கத்தியது. மயில் ஒன்று அவலமாய் அகவியது. ஊர் மக்கள் எல்லோரும் எழுந்துகொண்டனர். ஒரு துளி இரத்தம் என்னில் தெறித்தது. நாவல் வேரில் ரைக்ரர் ஏறி இறங்கியிருக்க பின்னால் வந்த உயரமான அந்தப் பெட்டி ஏறி வீதிப் புறமாய் கவிழ்ந்திருந்தது. விழுந்த நோவையும் மறந்து வேகமாய் ஓடினேன். டேய், வசந்! வசந்! மீண்டும் அதே காட்டுக்கத்தல். சலாமும் இதயனும் இரும்புச் சனியனுக்குள் அகப்பட்ட தோழனை, உயிரான நண்பனை, மீட்டெடுக்கப் போராடினர். ம் ம் ம் மூச்சு முட்டி விழி பிதுங்கி வெளியே வருமோ எனும் கோரமாய் இருந்தான் வசந். இயலுமட்டும் இழுத்துப் பார்த்தபின் பின்னே திரும்பி, குடிசைகளைப் பார்த்து அழுகையோடு, "யாராவது வாருங்களேன் என் வசந்தை மீட்க..." உரத்துக் கத்தினேன். அது காற்றைக் கிழித்து படலையைப் பிரித்து வீட்டுத் திண்ணையில் அப்புவையும் அம்மாவையும், அக்காவையும், அண்ணாக்களையும் எழுப்பியது. "எல்லோரும் வாருங்களேன்... எல்லோரும் வாருங்களேன்."

அந்த அழகான வைக்கோலால் வேயப்பட்ட குடிலுக்குள், வீட்டின் ஒரேயொரு பஞ்சுமெத்தையின் மீது வசந் கிடந்தான், அரை மயக்கமாக. வலதுகை தோள்மூட்டுடனும், இடதுகை முழங்கைக்குக் கீழாகவும் சிதைந்து தொங்கியது. மூச்சு மேலும் கீழுமாய் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. இரண்டு கைகளுக்கும் இவ்விரண்டு தலையணையாக, வீட்டில் இருந்த எல்லாத் தலையணைகளும் இரத்தத்தால் தோய்ந்து கிடந்தன. அந்த அம்மா, பாசம் மிகுந்த தாய் அன்பான அக்காவின் கரத்திலிருந்த சூடான கோப்பியை விரைவாக வாங்கி வசந்தின் உதட்டோரம் சரித்தார். முதுரந்த ஐயா, வசந்தைப் பார்த்த பின் பசுக்களின் பட்டியோரம் போனார், கொஞ்சம் பால் எடுக்க. பசுக்கன்று ஒன்று அம்மா என அழுதடங்கியது.

டேவிட் அண்ணர் வோக்கியில் 'சுப்பர்றொட்' மாற்றி உடனே வாகனத்தைக் கொண்டு வருமாறு பணித்தார். இடையில் கிராமத்தில் இருக்கும் மருத்துவபீட மாணவன் ஒருவன் பூரண முதலுதவி சிகிச்சையை மேற்கொண்டபின், வலியம் 3 மில்லிலீற்றர் மயக்க ஊசி மருந்தைச் செலுத்தியபின் வசந் கொஞ்சம் அமைதியானான். என்னருகே இருந்து இவ்வளவு காலமும் எங்களுடன் ஒன்றாய்த் துயின்ற மண்ணின் மைந்தன் களப்படுக்கையில் இருக்கின்றான். அருகே அமைதியாக இருந்த அக்காவுடன் கதைக்கத் தொடங்கினான் வசந். என்னடா திடீரென்று உரையாடுகிறான் என்று வியந்தேன்.

"அக்கா, அக்க..." இழுத்தது குரல்.
"உம், என்ன தம்பி?"

"நீங்க சரியா எங்கட மூத்தக்கா வித்தி மாதிரி. எங்கக்கா இப்ப என்ன செய்வா? சின்னத்தம்பிக்குப் பக்கத்தில படுத்திருப்பாவோ? தோட்டவேலை செய்து கஸ்டப்படுங்கள். எல்லாம் ஆமியால .... எளிய சிங்கள வங்கள்... எங்கட அப்பர் குடிச்சாலும் நல்லவர். ஐயோ, அய்யா..." வேதனை மிகுந்த அந்தத் தீனமான குரல் மெல்லிய அலையாக ஒலித்தது.

முற்றத்தில் நின்ற நாய் மெதுவாய் ஊளையிடத் தொடங்கியது. ஊ... ஊ... என உயிரையே துளைத்துவிடும்தொனி. தேங்காய் நெய் விளக்கு உயிரற்று எரிந்தது. மஞ்சளாய் உருகி உருகி அழுதது. விட்டிலொன்று திரியில் பட சிறகுகள் கொஞ்சம் வெளிச்சமாய் எரிய, பின் எண்ணெய்க்குள் விழுந்து துடித்தது. எண்ணெய் அலையோடு ஆடிய பின் ஓரமாய் ஒதுங்கியது.

தூரத்தே வாகனமொன்றின் இரைச்சல் அருவியோட்டத்தின் மேலாகத் தவழ்ந்து வருகிறது. அவ்விதம் வந்த டெலிக்கா வான் வசந்தைத் தாங்கிய வண்ணம் மீண்டும் வேகமாய் நகரத் தொடங்குகிறது. நான் வசந்தின் பக்கத்திநின்று அவனை ஆதரவாகப் பிடித்திருந்தேன். குருதிப் பெருக்கினால் அவன் பலம் குறைவது தெரிந்தது. வெள்ளமலை ஏற்றமடியில் கிறீஸ் என்ற சத்தத்தோடு வான் ஒருபுறமாக [illegible] றுப் போட்டுது போல' என வாகனத்தை ஓட்டிய தோழன் கூறியபடி இறங்கினான். வேறு வழியில்லாமல் வோக்கி டோக்கியில் தொடர்பு கொண்டு வேறு வாகனத்தை அழைத்தேன்.

எதிர்ப்புறமாக வந்த ஜீப்பை மறித்து, வசந்தை ஏற்றிவிட்ட பின் அவனது சொரசொரப்பான கன்னத்தை அன்போடு வருடிவிட்டு நான் விடைபெற வேண்டியவனானேன். "லியோ, என்னைத் தனிய விட்டிட்டுப் போகாதே" எனப் புலம்பினான். நான் என்ன செய்ய? வாகனம் மறையும் வரை என்நெஞ்சமும் அதன்பின் ஓடிக்கொண்டிருந்தது.

(தொடரும்...)

ஒளிவீச்சு
மே, யூன், யூலை 1993



தமிழீழ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தொகுப்பு

தாயக மண்ணின் அன்றாட போர், அரசியல், சமூக, கலை, இலக்கிய, விஞ்ஞான, விளையாட்டு நிகழ்வுகளின் படப்பிடிப்பு

இயபூமி-1 எனக் குறியீட்டுப் பெயரிட்ட மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு உட்பட பல்வேறு தாக்குதல்கள்

கடற்புலிகளின் படகுப் போட்டிகள் உட்பட திகிலூட்டும் விளையாட்டுச் சாதனைகள்

நாடகக் கலை, இலக்கிய வெளிப்பாடுகள்

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்புக்கள்

ஒளிவீச்சு 5

மே, யூன், யூலை 1993




வெளிவந்துவிட்டது - தமிழீழ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தொகுப்பை உள்ளடக்கிய 'ஒளிவீச்சு' எனும் வீடியோ சஞ்சிகை

## மாவீரர் நினைவாக இலண்டனில்

# ஓவியக் கண்காட்சியும் கலைநிகழ்வும்



மாவீரர் தினத்தையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியக் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட மாவீரர் நாள் நிகழ்ச்சிகள், 'கமர்சிமித்' நகர மண்டபத்தில் 04-12-93 சனி மாலை 5.30 மணிக்கு கேணல் கிட்டு அவர்களின் ஓவியக் கண்காட்சியுடன் ஆரம்பமாகியது. மாவீரன் கேணல் கிட்டு அவர்கள் வரைந்த ஓவியங்கள்; எழுக தமிழீழம், ஒளியை நோக்கி, நம்பிக்கை, காத்திருத்தல், பசி, போராட்டமும் கல்வியும், விடுதலைத் தீ, திருவிழா, கோலாட்டம், குண்டு வீச்சு, படுகொலை, ஏக்கம், சுவடுகள், சுதந்திரப் போராட்டம், பசுமையும் புரட்சியும், வீரமும் காதலும், போராளிகள், உழவு, இன்னிசை, மழை போன்ற தலைப்புகளில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் இவ் ஓவியக் கண்காட்சியைக் கண்டு கேணல் கிட்டுவின் இதயக் கனவுகளின் வெளிப்பாடான ஓவியங்களில் மெய் மறந்து நின்றனர்.

காட்சி மண்டபத்தின் நடுவில் மாவீரர் உருப்பொறிக்கப்பட்ட கூம்பக வடிவிலான மாதிரி நினைவுத் தூபி அமைக்கப்பட்டு, அதில் மாவீரர் நிழற் படங்களும் தமிழீழத் தேசத்தின் பூகோள அமைப்புப் படமும் இணைக்கப்பட்டு மாவீரர் புகழ்பாடும் வாசகங்களும் பொறிக்கப்பட்டிருந்தன. மாவீரர் நிகழ்ச்சிக்கு வந்த மக்கள் யாவரும் மாவீரர் மாதிரி நினைவுத் தூபிக்கு அஞ்சலியைச் செய்து கொண்டபின்னரே கலை நிகழ்ச்சி மண்டபத்திற்குள் நுழைந்தனர். இவ்வஞ்சலி நிகழ்ச்சியானது மனதை உருக வைக்கும் வகையில் அமைந்திருந்தது. இம் மண்டபத்திற்குள் நிற்கையில் புனித உணர்வும், தேச பக்தியும் நெஞ்சத்தே கரைபுரண்டு மாவீரரின் மகத்தான அர்ப்பணிப்புகளின் பெருமையை அகக் கண்முன் கொண்டு வந்து நிறுத்தி நெஞ்சுருக வைத்தது.







ஓவியக் கண்காட்சியை அடுத்து மாலை 6.30 மணிக்கு தீருவில் மாவீரர் லெப்டினன்ட் கேணல் குமரப்பாவின் துணைவியார் ரஜனி அவர்கள் குத்து விளக்கை ஏற்றி வைக்க, மாவீரர்தின கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. பிரபல பாடகர் பொன் சுபாஸ் சந்திரன் அவர்களின் 'தமிழிசை' அஞ்சலி ஓசையாக ஒலிக்க, அனைத்து நெஞ்சங்களும் மாவீரர்களுக்கு வீரவணக்கங்களைத் தெரிவித்தன. இதனையடுத்து நடன ஆசிரியை பத்மினி குணசீலனின் மாணவர்களும், நடன ஆசிரியை விஜயகுமாரி ஐங்கரனின் மாணவர்களும் நடன நிகழ்ச்சிகளை அளித்து, பரதத்தால் மாவீரர் புகழ் எடுத்தியம்பினர்.

மாவீரர் உரையை ஆசிரியரும், மாவீரர் ஒருவரின் சகோதரருமாகிய திரு. சிவகுமார் வழங்கினார். ஐரோப்பியப் பெண்ணான செல்வி. சூ. ஜெரிமி (Miss. Zoe Jeremy) வயலின் இசையில் தமிழீழப் பாடல்களை இசைத்தமை, தமிழீழ மாவீரர்களுக்கு அனைத்துலகும் அளித்து வரும் இதயாஞ்சலியின் குறியீடாகத் திகழ்ந்தது. அத்துடன் எமது தேசிய விடுதலைப் போராட்டம் இன்று, சர்வதேசங்களின் சாதாரண பிரசைகளையும் எவ்வளவு தூரம் ஈர்த்துள்ளது என்பதையும் இவ் ஐரோப்பியப் பெண்மணியின் பங்களிப்பு வெளிப்படுத்தியிருந்தது.

'விடியலின் சுவடுகள்' என்ற நாடகம், மண்ணை -மக்களை - போராளிகளை நேசிக்க வேண்டிய தேவையையும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் மகளுக்கும் ஏதோ ஒரு வகையில் போராட்டத்தில் பங்கெடுக்க வேண்டிய கடமை இருப்பதையும் நினைவூட்டக்கூடிய வகையில் நெறிப்படுத்தப்பட்டிருந்தது.

மாவீரர் தினத்தின் மனதைத் தொடும் இறுதி நிகழ்ச்சியாக 'மாவீரர் புகழ் பாடுவோம்' எனும் எழுச்சி கானங்கள் நிகழ்ச்சி இடம்பெற்றது. தமிழீழத்தில் பாடப்பெற்ற விடுதலைப் போராட்ட உணர்வுகளை உள்ளடக்கிய பாடல்களுக்கு, உயிரோட்டமுள்ள இசையமைப்புடன் குரல் கொடுக்கும் நிகழ்வாக இது அமைந்தது. இந் நிகழ்ச்சியில் மாவீரர் கானங்கள் பாடப்படுகையில், மக்கள் விழிகள் நனைவதையும், அந் நனைவு எவ்வகையிலேனும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தமது பங்களிப்பை நல்க வேண்டுமெனும் உணர்வாக மக்கள் மத்தியில் பரவியதையும் காணக் கூடியதாக இருந்தது. எழுச்சி கானங்கள் இசை நிகழ்ச்சி 11.30 மணி வரை நீடித்தும் மக்கள் மண்டபம் நிறைந்தே காணப்பட்டனர்.

மாவீரர் பரம்பரையில் நாமும் பிறந்தோம் என்ற பெருமையுடன் மாவீரர் காலத்தில் நாமும் வாழ்ந்தோம், அம் மாவீரர் கனவுகளை நனைவாக்க உழைப்போம் என்ற உறுதியுடன், இந் நிகழ்ச்சியில் பங்குபற்றிய ஆயிரக்கணக்கான மக்களும் மாவீரர் தியாகங்களை, உணர்வுகளைச் சுமந்தபடி மண்டபத்தைவிட்டு வெளியேறியதைக் காணக்கூடியதாகவிருந்தது. ■

## அவுஸ்திரேலியாவில்

# தியாகிகளுக்கு ஓர் அஞ்சலி





தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மெல்பேர்ண், அவுஸ்திரேலியாக் கிளை ஒழுங்கு செய்திருந்த மாவீரர் தினம், 27-11-93 சனிக்கிழமை பிற்பகல், விக்டோரியா கிளென் வேவர்லி உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தேறியது. 800க்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டதும், மண்டபம் நிறைந்த போதும் மக்கள் உள்ளேயும், வெளியேயும் நின்றுகொண்டே பங்குபற்றியதும், இங்கு குறிப்பிடத்தக்கது.

மாவீரரின் இரத்தத்தால் தமிழீழம் சிவந்து உருவாகும் தோற்றத்தை அரங்கத்தின் திரை சித்தரிக்கும் பொழுது தமிழீழத் தேசியக் கொடியை ஒருங்கிணைப்புக் குழுவின் அவுஸ்திரேலியாப் பொறுப்பாளர் திரு. த. -ஜெயக்குமார் அவர்கள் ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். பின்னர் மாவீரரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், அவர்களது உறவினர்களும் தீபமேற்றி அஞ்சலி செலுத்தினர்.

நாட்டியாலயா மாணவிகளின் 'மாவீரர் தம் மங்காப் புகழை'க் குறிக்கும் கும்மி நடனம், கலாஞ்சலி மாணவிகளின் 'தரணி வெல்லும் புலிகளைப் பரணி பாடுவோம்' நடனம், மெல்பேர்ண் இசைக் கலைஞர்களின் 'கானாஞ்சலி', நிருத்தக் சேத்திரா -மெல்பேர்ண் இன்னிசைக் குழுவின் உணர்வு பூர்வமான 'யூலை யாகம்' என்ற நாட்டிய நாடகம் என்பன கலையம்சத்துடனும், சுதந்திர உணர்வோடும் வெகு சிறப்பாக அமைந்திருந்ததை சபையோரின் பாராட்டில் இருந்து உணரக் கூடியதாக இருந்தது.

இடைவேளையின் பின்னர், சிட்னிக் கலைஞர்கள் தயாரித்து அளித்த 'யம தர்பார்' ஓரங்க நாடகம் வித்தியாசமாக ஆனால் யதார்த்த பூர்வமாக இருந்ததை சபையோர் நன்கு ரசித்தனர். சிட்னியைச் சேர்ந்த செல்வி அபிராமி ஜெகதீஸ்வரன், 'நன்றிக் கடன்' என்ற தலைப்பில் மாவீரர் கேணல் கிட்டுவைப் பற்றியும் அவர்தம் அறிவுரைகள் குறித்தும் அழகாகப் பேசினார்.

இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் தயாரித்த 'தாயகக் கனவு' ஒளிச்சித்திரம் அகன்ற திரையில் காண்பிக்கப்பட்டது. பின்னர் நூற்றுக் கணக்கான மாவீரர்களின் புகைப்படப் பதாதைகளை, வந்திருந்த மக்கள் தாங்கி நிற்க தமிழீழத் தேசியக் கொடி இறக்கம் செய்யப்பட்டதும் விழா முழுமையடைந்தது. ■

# யேர்மனியில் இடம்பெற்ற மாவீரர் நாள்

## – ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

ஒன்னாபுறூக் நகரில் —உள்ள காட்லாக மண்டபத்தில் விடுதலைப் புலிகள் யேர்மன் கிளையினர் மாவீரர் நாள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

26ம் திகதி நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு மண்டப மேடையில் மாவீரருக்கான புனித தளம் உருவாக்கப்பட்டது. இயக்க பொறுப்பாளர் உட்பட அமைப்பின் பொறுப்பில் இருக்கும் அனைத்து பிரதிநிதிகளும் 27 ம் திகதியின் ஆரம்ப நிமிடத்துளியின் போது தீபமேற்றி, மௌன அஞ்சலி செலுத்தி மாவீர் களத்தில் உறுதி எடுத்தனர்.

வண பிதா ஜெயசேகரம் அடிகள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டு ஒளி வணக்கப் பாடல் பாடினார்.

நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்டபடி 27 ம் திகதி பி.ப. 4 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. மண்டப வாசல் தமிழீழத் தோரணம் ஒன்றினால் அலங்கரிக்கப்பட்டு, மக்கள் அனைவருமே தமிழீழ நுழைவாயிலால் மண்டபத்தினுள் நுழைவது போன்ற பிரமையை உண்டுபண்ணியது.

எந்தக் கொடி பட்டொளி வீசிப் பறக்க வேண்டும் என அந்தப் புனித ஆத்மாக்கள் விரும்பினார்களோ, எந்தக் கொடி பல நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட தமிழீழக் கொடியாக வேண்டும் என அந்த மாவீரர்கள் உயிர் துறந்தார்களோ, அந்தக் கொடியை விடுதலைப் புலிகள் யேர்மன் கிளைப் பொறுப்பாளர் திரு. சிவநேசன் அவர்கள் ஏற்றி வைக்க நிகழ்ச்சி ஆரம்பமானது.



இதுவரை காலமும் நடந்த யேர்மன் தமிழ் வைபவம் எதிலுமே கலந்து கொள்ளாத அளவு, ஐயாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

கொடியேற்றலைத் தொடர்ந்து தீபாராதனை இடம்பெற்றது. மாவீரரோடு உரையாடுவது போன்ற ஆத்மார்த்தமான வார்த்தைகள் இந்த வேளையில் ஒலிபரப்பப்பட்டன. மாவீரரை மனதில் சுமக்கும் இந்த புனிதமான நிமிடங்களில் மாவீரர் குடும்ப உறுப்பினர்களும், பிரதிநிதிகளும் தீபமேற்றி வழிபட்டனர்.



மாணவர் அமைப்பின் பெண் அங்கத்தினர் பாவாடை தாவணியுடன் நின்று வருகை தந்தோரை வரவேற்றனர். இந்தச் சூழல் தமிழீழத்தின் மண்வாசனையை உண்டுபண்ணியது.

"குழந்தைகள் கூட மௌனம் காத்து மௌன அஞ்சலி செலுத்தியது, மாவீரர் மீதும் நமது தேசியக் கொடி மீதும் நமது மக்கள் வைத்துள்ள பக்தியைக் காட்டுவதாக உள்ளது" என கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் தனது பேச்சின் போது குறிப்பிட்டுப் பேசினார். மக்கள் புலிகளோடு இணைந்துள்ள நிலைகளை பல்வேறு உதாரணங்களோடு விளக்கிய அவர், "மக்களைக் காப்பாற்ற தங்கள் இன்னுயிர்களை தந்து போராடிய மாவீரர்கள் சாதனைக்குப் பின்னும் 'மக்கள் இல்லாத மண்' என்ற சொல்லை வைத்து சிலர் விளையாடுவது கேவலமானது; கோழைத்தனமானது; மாற்றான் காலைத் தொழும் நிலைக்கொப்பானது; வெறுக்கத்தக்க இழிசெயல்" என்றார்.

சிறுவர், சிறுமியரின் பேச்சு, கவிதை ஆகியனவும் கலை பண்பாட்டுக் கழக ஆசிரியர்களின் மிக நேர்த்தியான நடன அமைப்பில் உருவா்ன நடனங்களும் பலரது பாராட்டையும் பெற்றது. ஈழ விடுதலை உணர்வை வளர்த்துவிடும் கலை வெளிப்பாடாக அவை அமைந்திருந்தன.

மாவீரர் நாள் செய்தியாக விடுதலைப் புலிகள் இயக்க யேர்மன் கிளைப் பொறுப்பாளர் பேசும் போது, "காற்றிலும், கடலிலும், நெருப்பிலும் தங்கள் சந்தன மேனியை பிய்த்து எறிந்த தற்கொடைத் தெய்வங்களை நாம் பூசிக்க வேண்டும். இந்த நாடு நமக்கு நிரந்தரமானது அல்ல. நமது நாட்டை விரைவில் அமைக்க ஆவன செய்ய வேண்டும்" என்றார்.

தமிழீழம் இசைக் குழுவினர் ஒன்பது புதிய புரட்சிப் பாடல்களைப் பாடி, வருகை தந்திருந்த அனைவரது பாராட்டையும் பெற்றனர். தமிழ் மாணவர் அமைப்பு, செஞ்சோலைச் சிறுவர்களுக்காக பல நகரங்களில் உண்டியல் மூலம் சேகரித்த பணத்தையும், மண்டபத்தில் சேகரித்த பணத்தையும் செஞ்சோலைப் பொறுப்பாளரிடம் கையளித்தது. 'மாணவ வானம்பாடிகள் கொத்திக் கொத்திச் சேகரித்த நெல்மணிகள்' என அந்தத் தொகை வர்ணிக்கப்பட்டது.




'எங்கள் பங்கை ஆற்றிவிடுவோம்' என்ற தாளலயமும், 'இதுதான் நிஜம்' என்ற கலை பண்பாட்டுக் கழக நாடகமும் இரண்டு வேறுபட்ட கோணத்தோடு விடுதலையை நோக்கிய நாடகப்பணி என பார்வையாளர்கள் கருத்துத் தெரிவிக்கும்படி அமைந்திருந்தன.

இறுதியாக உலகத் தமிழர் இயக்கச் செயலாளர் திரு. சோமஸ்கந்தன் நன்றியுரை வழங்கினார்.

மிகப் பெரிய மண்டபமாக இருந்தபோதிலும், எதிர்பார்த்ததை விட அதிகமான தமிழ் மக்கள் உணர்ச்சிப் பெருக்குடன் கலந்து கொண்டதில் மண்டபம் நிறைந்து வெளிமண்டபத்தில் தொலைக்காட்சிப் பெட்டி வைத்து நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டது. பத்து மணிக்கு கொடி இறக்கத்துடன் மாவீரர் நாள் வைபவம் நிறைவு பெற்றது. "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற தாரக மந்திரத்தை மக்கள் உணர்ச்சியோடு சொல்லி மண்டபத்தை விட்டுக் கலைந்து சென்றனர். ■

# நெதர்லாந்தில் – மாவீரர்நாள்



எமது தாயகமாம் தமிழீழ நாட்டின் விடிவுக்காய் மரணித்த மாவீரர்களுக்கு மரியாதை செய்யும் 'மாவீரர் நாள்' விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளையினரால் தமிழீழத்தின் தேசிய நாளான 27-11-93 அன்று வட கொலண்ட்டில் உள்ள Schagen இல் உணர்வு பூர்வமாக அனுட்டிக்கப்பட்டது.

நெதர்லாந்தில் தமிழர்களின் தொகை மிகக்குறைவு என்றபோதிலும் சுமார் நானூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் இம் மாவீரர் நாள் நிகழ்ச்சிக்கு வந்திருந்து, எமது தாய் நாட்டிற்காக தம் உயிரை தற்கொடை செய்த மாவீரரை நினைவு கூர்ந்தனர். இவ்விழாவுக்கு சிறப்பு விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோரன்ஸ் திலகர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இந் நிகழ்ச்சியில் இடம்பெற்ற வட கொலண்ட் கலைஞர்களினால் தயாரித்து வழங்கப்பட்ட "- கல்லறைகள் உயிர்பெற்றால்", "சுதந்திர தாகம்" ஆகிய இரண்டு நாடகங்கள் மக்களின் சிந்தனையைத் தூண்டுவதாக சிறப்பாக அமைந்திருந்தன. முதன் முதலாக நெதர்லாந்தில் மேடையேறிய பிரான்ஸ் கலா மன்றத்தினரின் "தியாக தீபம்" வில்லுப்பாட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. செல்வி பிரியதர்சினி அருமைநாயகத்தின் நடனங்களும் மற்றும் பலரது கருத்துரைகளும் இந்நிகழ்ச்சியைச் சிறப்பித்தன. ■



நெதர்லாந்தில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்ச்சியின்போது இடம்பெற்ற நாடகத்தில் ஒரு காட்சி

# மாவீரர் நாள் — நோர்வே



மாவீரர் நாள் நிகழ்ச்சியில் இடம் பெற்ற நடனம்



'யாழ்தேவி' நாடகத்தில் இடம் பெற்ற காட்சி ஒன்று

## போருககான ஆயுத...

வதற்கென, இதுவரை சிறீலங்கா இராணுவத்தின் தளபதியாக இருந்த சிசில் வைத்தியரட்ன வின் பதவிக்காலம் முடியு முன்பே பதவி விலகுமாறு சிறீ லங்கா ஜனாதிபதி நிர்ப்பந்தித் துள்ளார். புதிய சிறீலங்கா இரா ணுவத்தின் தளபதியாக, சிறீ லங்கா ஜனாதிபதியின் அதி நம் பிக்கைக்குரிய தற்போதைய இராணுவத் தலைமை அதிகாரி ஜெரி டி சில்வா நியமிக்கப்பட இருக்கிறார். இவரையே வடப குதிக்கான இராணுவ நடவடிக் கைகளுக்குப் பொறுப்பாக சிறீ லங்கா ஜனாதிபதி நியமித்திருந் தது மட்டுமல்லாமல், இவருக் குக் கட்டுப்பட்டே சிறீலங்கா வான்படை, கடற்படைத் தலைமைகளும், களத்திலுள்ள சிறீலங்கா இராணுவத் தளபதி களும் செயற்பட வேண்டும் எனவும் சிறீலங்கா ஜனாதிபதி பணித்திருந்தார்.

தற்பொழுது சிறீலங்காவின் கிழக் குப் பிராந்திய இராணுவத் தள பதியாக உள்ள லக்கி அல்கம, சிறீலங்கா இராணுவத் தலைமை அதிகாரியாக மாற்றப்பட இருப் பதாகத் தெரிகிறது. அத்துடன் இராணுவ உயர் அதிகாரிகள் பலர் விடுதலைப் புலிகளுட னான சண்டைகளின் போது கொல்லப்பட்டும் செயலிழந்தும் போனமையால் நாற்பது கனிஸ்ட்ட தரத்திலுள்ள இரா ணுவத்தினருக்கு உயர் அதிகா ரிகள் பதவிகள் வழங்கப்பட்டு தரம் உயர்த்தப்பட இருப்பதாக வும் தெரியவருகிறது.

### மாரி காலம் முடிந்ததும்....

தற்பொழுது வடபகுதியில் மழைக்காலம் என்றபடியால், இந்நேரத்தில் ஆயுதப் பெருக் கம், நவீனப்படுத்தல் இராணு வக் கட்டமைப்பை சீர் செய்தல் என்பவற்றை திட்டமிட்டு ஒழுங்கு செய்து வரும் சிறீலங்கா அரசாங்கம், மாரி காலம் முடிந் ததும் தமிழீழப் பிரதேசத்தின் மீது பாரிய ஆக்கிரமிப்பு யுத்த

[illegible] கொழும்பு அவதானிகள் கருத் துத் தெரிவித்துள்ளனர்.

### இராணுவத் தீர்வே வழி

"நாட்டின் ஒருமைப்பாட்டை நிலை நாட்டவும், விடுதலைப் புலிகளின் அமைப்பின் பலத் தைக் குறைக்கவும், படைப்பலத் தைப் 'பெருக்கவும்'" சிறீலங்கா அரசாங்கம் முயன்று வருவதாக சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வெளிப்படையா கக் கூறியுள்ளமை சிறீலங்கா அரசின் இராணுவத் தீர்வு நோக்கை தெளிவுபடுத்தியுள்ள து. ■

## போரென்று படை....

இன்று இந்த கவிதைவரிகளுக்கு இலக்கணமாகவும், இலக்கிய மாகவும் புலிகள் உலாவருகின் றார்கள் என்பதில் சந்தேக மில்லை. நாகதேவன் துறையி லும், பூநகரியிலும் விடுதலைப் புலிகள் வெங்கொடுமைச் சாக் காட்டில் விளையாடியதைப் பார்த்தோம். வெங்குருதி தன் னில் கமழ்ந்து வீரம் செய்வதைக் கண்டு களித்தோம்.

ஓராயிரம் ஆண்டு இடைவெளிக் குப் பிறகு இப்போது தான் தமி ழினம் ஓர் போர்க்களத்தைப் பார்க்கிறது. அங்கே எதிரிகளின் தலைகள் புலிகளால் வேட்டை யாடப்படுவதைக் காண்கிறது.

ஒரு காலத்தில் உலகெங்கும் கொடிகட்டி ஆண்ட தமிழினம் மீண்டும் அந்த திசை நோக்கி நடைபோடத் தொடங்கிவிட்டது. பாரதிதாசனின் ஆசைகள் நிறைவேறத் தொடங்கிவிட்டன.

சிங்கள சிறீலங்காவிற்கும் தமி ழீழத்திற்கும் இடையில், இன்று இருப்பது எல்லைப்பிரச்சினை. இனப்பிரச்சினையல்ல. தமிழீ ழத்தை ஆக்கிரமித்துக் கொண் டிருக்கும் அந்நியப் படையை, போர் முனையில் தோற்கடித்து

தமிழீழத்தின் சுதந்திரத்தை, இறைமையை வென்றெடுப்பதே எமக்குள்ள ஒரே வழி.

சிங்களவர் தமிழர்களை ஆண் டார்கள் என்பதற்கு வரலாறு இல்லை. சிங்களவரை தமிழர் ஆண்டார்கள் என்பதற்கு வர லாறு இருக்கிறது.

எனவே இன்றைய பிரச்சினை சிங்கள சிறீலங்காவிற்கும் தமி ழீழத்திற்கும் இடையிலான எல் லைகள் பற்றியதாகும்.

**போரென்று படைகொண்டு எல் லைக்குள் நுழைந்தாயா? - தமிழன்**
**புறமிட்டு களம் அஞ்சி மண் விட்டு மறைந்தானா?**
**நீருண்டு நெல்லுண்டு நிறை வாக நம் நாட்டில் -நாங்கள்**
**நெருக்குண்டு தள்ளுண்டு நிற் போமா உன் கூட்டில் தேசத் தில் தொழிலுண்டு வழியுண்டு நாம் வாழ**
**வேங்கை செத்தாலும் விடு வானா ஈழத்தை நீ ஆள?**
**தமிழீழம் இல்லாமல் போரிங்கு ஓயாது**
**தமிழ்வாழும் தேசத்தில் தன் மானம் சாயாது**
**விழுகின்ற போர்வீரர் திறன் இங்கு உரமாகும்! ■**

**நன்றி: உலகத்தமிழர்**

## மௌன ஊர்வலத்துக்குப் .....

உயிரிழக்கவும் செய்தனர். இச் சம்பவத்தில் ஐம்பது பேர் வரை காயமடைந்தனர். இதனைக் கண்டித்து கத்தோலிக்க ஆயர் கள் பாப்பரசருக்குக் கூட்டாக முறையீடு செய்திருந்தனர். யாழ்ப்பாணத்தின் சகல மதத் தலைவர்களும் இதனை வன் மையாகக் கண்டித்ததுமல்லா மல், சிறீலங்கா ஜனாதிபதிக்குக் கண்டனக் கடிதங்களையும் அனுப்பியிருந்தனர். இந்த வழி பாட்டுத்தலத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை மௌன ஊர்வலம் ஒன்று யாழ். நகரில் நடாத்தப்பட்டது. சென் ஜேம்ஸ் தேவாலய பங்குத் தந்தை அருள் நேசன் தலைமையில் நடை பெற்ற இம் மௌன ஊர்வலத் தில், கத்தோலிக்கக் குருக்கள் கன்னியாஸ்திரிகர்களுடன் பிற மதத் தலைவர்களும் பெரும்பா லான மக்களும் பங்கு பற்றினர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தின் யாழ் பிரதிநிதியும் இவ் வாலய இடிபாட்டைப் பார்வை யிட்டார்.

இவை நடந்து முடிந்து இரண்டு தினங்களுள் சிறீலங்கா விமானப் படை மீண்டும் கண்மூடித்தன மான தாக்குதலை மேற்கொண் டமை, தாங்கள் நடத்திய மௌன ஊர்வலத்திற்கு சிறீலங் காப் பாதுகாப்பு படையினர் எடுத்துள்ள பதில் நடவடிக்கை என, மௌன ஊர்வலத்திற்கு தலைமை தாங்கிய அருட்தந்தை அருள்நேசன் கருத்து வெளியிட் டுள்ளார்.

### துடிதுடித்து மரணம்

இத்தாக்குதலின் போது சின்னக் கடைச் சந்தையும் விமானப்ப டையால் இலக்காக்கப்பட்டது. [illegible] ருந்த மக்களில் எட்டுப் பேர் கொல்லப்பட்டதுடன், எதிரில் இருந்த பேக்கரி உட்பட எட்டுக் க்கடைகளும் பலத்த சேதத்துக்கு உள்ளாகின. இத்தாக்குதலின் போது வீடு ஒன்றில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த எஸ் பிரியன் மேரி பொலின் எனும் 26 வயதுப் பெண்ணும், அவரின் குழந்தைகளான ஐந்து வயது நிரஞ்சனும், ஒன்றரை வயது றெஜினாவும் துடிதுடித்து இறந் துள்ளனர். பாசையூர் குருநகர்ப் பகுதிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில் எழுபது வய தான மான், 68 வயதான மரு தப்பா பாலசிங்கம், 67 வயதான கிறிஸ்தோபர் சுலக்கீன், 66 வயதான வில்லியம் ஜெயராஜ சிங்கம், 65 வயதான கிருபைரத் தினம், 60 வயதான சுலக்கீன் தோமஸ் ஆகியோரும் உயிரிழந் துள்ளனர். கொல்லப்பட்டவர்க ளில் ஸ்ரனிஸ்லோஸ் பிரகாசி யம்மா, சிரில்ராணி, வே. நாக ராசா ஆகியோர் நாற்பது வய தைத் தாண்டியவர்கள். பற்றிக் அந்தோனிப்பிள்ளை, யேசுராசா றோஸ்மலர், பற்றிக் செல்வ ராணி, கிலோமன் றோசாரி, கந் தையா விக்னேஸ்வரன், ம. சித் தாத்துரை, ஆகியோர் ஐம்பது வயதைத் தாண்டியவர்கள். அ. சாள்ஸ், வில்வராயர் ராணி ஆகியோருக்கு முப்பந்தைந்து வயது. பதினொரு வயதுச் சிறு வனான சிரில் அகஸ்ரின் சாந் தன், நான்கு வயதுக் குழந்தை யான செல்வராசா ரஜன்சி, மூன்று வயதுக் குழந்தையான ரவிறியன்சி, பதினெட்டு வயது இளைஞனான மயூரன் என்பவர் களும் குண்டு வீச்சுக்குப் பலி யான 26 பேர்களுள் அடங்குகின் றனர். யாழ்ப்பாணத்திலும் கிளி நொச்சியிலும் கர்ப்பிணித் தாய் மார் இருவர் குண்டு வீச்சுக்குப் பலியான கொடுமை நிகழ்ந்துள் ளது.

### யுத்த சூனியப் பிரதேசத்தில்

இக்குண்டு வீச்சின் பொழுது, யுத்த சூனியப் பிரதேசமான யாழ் பெரியாஸ்பத்திரியில் இருந்து ஐம்பது யாருக்குள் விழுந்து வெடித்த குண்டு ஒன்றின் அதிர்ச்சியினால், நோயாளிகள் சிலர் படுக்கைக் கட்டில்களில் இருந்து தூக்கி வீசப்பட்டுள்ள னர். செஞ்சிலுவைச் சங்க ஊழியர் ஒருவர் மற்றுமொரு கைக்குழந்தை உட்பட பத்துப் பேர் காயமடைந்தனர். அதே தினத்தில் மண்டைதீவு இரா ணுவ முகாமில் இருந்து ஏவப் பட்ட செல் ஒன்று, யாழ் வைத் தியசாலைக்கு அண்மையில் மணிக்கூட்டுக் கோபுர வீதியில் வந்து விழுந்து வெடித்ததில் மூன்று வீடுகள் சேதமாகியுள் ளன. கடந்த 9 ம் திகதி வியா ழன் மாலை வைத்தியசாலை வளவுக்குள் விழுந்து வெடித்த செல்லினால் மருத்துவர் ஒருவ ரும், இரண்டு நோயாளிகளும் காயப்பட்டதோடு, வைத்திய சாலைக் கட்டிடமும் சிகிச்சைப் பிரிவுகளும் சேதமடைந்துள் ளன.

இவ்வாறாக யூத்த சூனியப் பிர தேசம் எனப் பிரகடனப்படுத்தப் பட்ட பகுதிகளிலும் சர்வதேச யுத்த விதிகளுக்கு முரணான வகையில், சிறீலங்கா தொடர்ந் தும் தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றது.

### பல இலட்சம் சொத்து நாசம்

இந்த சுப்பர் சோனிக், புக்காரா, எம். ஐ. 8 விமானத் தாக்குதல் களால் யாழ். குடாநாடு எங்கும் பல இலட்சம் பெறுமதியான பொது, மற்றும் தனியார் சொத் துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரிப் பகுதியில் நடந்த தாக்குதல்களினால் சாவகச்சேரி நவீன சந்தை உட்பட பல கடைகள் சேதமாக்கப்பட்டதால், ஐம்பது இலட்சம் ரூபாவுக்கு மேல் பொதுச் சொத்து நட்டம் ஏற்பட்டுள்ளது. அதேவேளை யாழ். செயலகத்துக்கு முதலா வது குண்டு வீச்சில் ஏற்பட்ட சேதம் 88 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. குருநகர்ச் சந்தைப் பகுதிச் சேதமும் சுமார் 50 இலட்சத்துக்கு மேல் எனத் தெரியவருகிறது. கோண்டாவில் மிசன் பாடசாலை மேல் நடாத் தப்பட்ட குண்டு வீச்சில் ஆசி ரியை ஒருவர் கால் இழந்துள் ளதுடன் அதிபரும் பல மாணவர் களும் காயங்களுக்கு உள்ளாகி யுள்ளனர்.

### அமைப்பைப் பலவீனப்படுத்தல்

சிறீலங்காப் பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவின் கருத்துப்படி, விடுதலைப் புலிகளின் படைப் பலத்தை அழிக்கும் தந்திரோ பாயத்தை மட்டுமல்ல, விடுத லைப் புலிகளின் அமைப்பைப் பலவீனப்படுத்தும் தந்திரோபா யத்தையும் சிறீலங்கா அரசாங் கம் தனது கொள்கையாகக் கொண்டு செயற்படுகின்றது. இதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் அமைப்பாக இருப்பதால், அவர்களைப் பல வீனப்படுத்துதல் மூலமே, தமி ழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பலவீனப்படுத்தலாம் என சிறீலங்கா அரசாங்கம் கருதுகின்றது.

இதற்காகவே, மக்கள் மீதான குண்டு வீச்சை -வான்படை யுத் தத்தை, சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச யுத்த நியதிகளுக்கு முரணான வகையில் தொடர்ந்து நடாத்திக் கொண்டிருக்கிறது. ■

"விடுதலைப்புலிகளின் குரல்"
தொலைபேசிச் செய்திச்சேவை
நோர்வே

1. OSLO 22 190037 (இரு இணைப்புக்கள்)
2. BERGEN 55 318796
3. TRONDHEIM 72 591191
4. STAVANGER 51 570474
5. MOLDE 71 251768
6. NORTH - NORWAY (BATSFJORD) 78 983145
7. FLoRO 57 747851



# மாவீரர் தாகத்தை வெளிப்படுத்திய சுவிஸ் மாவீரர் நாள்

தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையினரால் 28. 11. 1993 ஞாயிறன்று அலை கடலெனத் திரண்ட 3000 இற்கு மேற்பட்ட தமிழீழ தேச பக்தர் மத்தியில், மாவீரர் நாள் விழா நிகழ்வுகள் இனிதே இடம்பெற்றன. இம் முறை நடைபெற்ற மாவீரர் தினமானது அதிகரித்துச் செல்லும் மாவீரர்களின் எண்ணிக்கையைப் போன்றே, அதிகரித்து வந்து கலந்து கொண்ட தேசபக்த உள்ளங்களின் மிகையை எடுத்துக் காட்டியது.



[பி]ற்பகல் 3 மணியளவில் ஆரம்[பி]க்கப்பட்ட மாவீரர் தினத்தின் [ஆ]ரம்ப நிகழ்ச்சியாக, மாவீர[ர் ஒருவரி]ன் தாயொருவரால் புலிக் [கொ]டி ஏற்றி வைக்கப்பட்டது. [ம]ண்டபத்தின் முற்பகுதியில் [மா]வீரர் துயிலும் இல்லம் [போ]ன்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்[டி]ருந்தது.



கலை நிகழ்வுகளை விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், அதனுடன் இணைந்து சூரிச், சுக், லுசேர்ண் நாட்டிய [அ]ரங்கக் கல்லூரி மாணவிகளும் பங்கேற்று மேடையேற்றினார்கள்.

மாவீரர் விளக்கேற்றும் நிகழ்வு, சிறப்பு விருந்தினராகக் கலந்து [கொ]ண்ட விடுதலைப் புலிகளின் [ச]ர்வதேசச் செயலகத்தின் சட்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான திரு. நடேசன் சத்தியேந்திரா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பின்னர், மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள் என்று [தொ]டர்ந்து மாவீரர் மங்கள விளக்கேற்றல் நடைபெற்றது.

விளக்கேற்றலைத் தொடர்ந்து மண்ணிற்காக மரணித்த மாவீரர்களிற்கும் பொதுமக்களிற்கும் இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலியும் அதைத் தொடர்ந்து மங்[க]ள வாத்திய இசை, தவில் - நாதஸ்வரக் கலைஞர்களால் [இ]சைக்கப்பட்டது. தமிழ்த் தாய் [வ]ணக்கம் திருமதி பகவதி நட[ரா]ஜா அவர்களால் பாடப்பட்[ட]து.

[ப]லவேறு எழுச்சி நடனங்கள் [மே]டையில் தோற்றம் பெற்று மக்[க]ளைக் கவர்ந்தன. இம் மாவீரர் தினத்தில் சிறப்பு நிகழ்வாக 'கரும்புலிகள்' இசைத்தட்டு [வெ]ளியீட்டு நிகழ்வு நடைபெற்[ற]து. இவ் இசைத்தட்டை தமி[ழீழ] விடுதலைப் புலிகளின் [சு]விஸ் கிளைப் பொறுப்பாளர் [தி]ரு. முரளிதரன் அவர்கள் [வெ]ளியிட முதல் தட்டை பூநகரி [இ]ராணுவ முகாம் தகர்ப்பில் [மா]வீரனாகிவிட்ட கலையரசனின் தகப்பனார் திரு. வேலாயுத[ப்] பிள்ளை பெற்றுக்கொண்டார்.

[பி]ன்னர் திரு. சத்தியேந்திரா அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர், தனது பேச்சினிடையே தளபதி கேணல் கிட்டு அவர்கள் இலண்டனில் இருந்தவேளை அவருடன் பழகிய அந்தநாள் ஞாபகங்களை நினைவுகூர்ந்தார்.

சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் திரு. முரளிதரன் பேசும் போது "இஸ்ரேலிய சியோனிசக் கொள்கைகள் விரும்பத்தகாதவையாக இருந்த போதிலும், நாடற்றவர்களாக்கப்பட்ட யூதர்கள் தமக்கென ஒரு நாட்டை உருவாக்குவதில் எவ்வாறு முன்னின்றார்கள், எவ்வாறு சர்வதேச உறவுகளை வளர்த்து தங்களது நாட்டின் உருவாக்கலுக்கான அத்திவாரங்களையும் இட்டு, மேற்குலகின் உறவுகளில் அழுத்தங்களைப் பிரயோகித்து இஸ்ரேலின் இறமையை காத்துக் கொண்டார்கள்" என்பதை விளக்கமாக எடுத்தியம்பி, தமிழீழ மக்களும் நாடற்ற அகதிகளாக தேசம் தோறும் உலாவராமல் எமக்குரிய நாடொன்றை உருவாக்குதலில் எவ்வாறு உதவ வேண்டும் எனவும் எடுத்துக் கூறினார்.

இறுதி நிகழ்வாக புதுவை அன்பனின் தாளலய நாடகமான 'அவலங்கள்', இசையின் மூலம் பல நல்ல கருத்துக்ளை தாளலயத்துடன் எடுத்துக் கூறியது. இந்நாடகத்தை திறம்பட நடாத்திக் காட்டிய திரு. அன்டன் பொன்ராஜா அவர்கள் அவையோரால் பெரிதும் பாராட்டப்பட்டார்.

நிகழ்ச்சிகள் நிறைவு பெற்ற வேளையில், மேடையில் இந் நிகழ்ச்சியில் பங்குபற்றிய கலைஞர்கள், 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற பாடலை முதலில் பாட, மக்களும் ஒருமித்த குரலில் திருப்பிப் பாடி தங்கள் தாகத்தை வெளிப் படுத்தினர்.

மாவீரர் சோகம் தாங்கிய கனத்த மனதுடன் மாவீரர் தினமானது இனிதே நிறைவு பெற்றது. ■



## சக்திப்பகுதி அலுவலகத்தில் ஆக்கிவாயு பிறப்பாக்கி

தற்போது நிலவிவரும் பெற்றோலிய எரிபொருள் பிரச்சினையை ஓரளவேனும் நிவர்த்தி செய்ய, குறைந்த செலவில் ஒரு மாற்றீடாக ஆக்கிவாயு பிறப்பாக்கியினை, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினர் வடிவமைத்துள்ளனர்.

இரட்டைச் சூட்டடுப்புத் திட்டத்தைத் தொடர்ந்து, சக்திப் பகுதியின் இரண்டாவது முக்கியமான அறிமுகமாக, இத் திட்டம் விளங்குகிறது. இதன் மூலம் விவசாயிகள், தொழிற்சாலை உரிமையாளர்கள், இயந்திர பாவனையாளர்கள் மிக விரைவில் பயன்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத் திட்டம் தொடர்பான விபரங்களையும், ஆக்கிவாயுவில் இயந்திரம் இயங்குவதையும் தாவடியில் அமைந்துள்ள சக்திப் பகுதி அலுவலகத்தில் பாவனையாளர்களின் பார்வைக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வைத்துள்ளனர். ■

## தவறு வேறு எங்கோ...

சிறீலங்கா அரசியற் தலைமைப்பீடத்தைப் போன்றே இராணுவத் தலைமைப் பீடமும் குழம்பிப் போயுள்ளது. பூநகரியில் ஏற்பட்ட இக் குழப்பத்தில் இருந்தும், அதிர்ச்சியிலிருந்தும் இராணுவத் தலைமைப்பீடம் மீளும் முன்னரே அரசியல்வாதிகளினதும், பத்திரிகைகளினதும் கண்டனத்தை இராணுவத் தலைமைப்பீடம் எதிர்கொள்ள வேண்டி வந்தது. இந்நிலையில்தான் வடபகுதிக்கான இராணுவக் கட்டமைப்பில் இராணுவத் தலைமைப்பீடம் மாற்றங்களை அறிவித்ததோடு, புதிய தளபதிகளையும் நியமித்துள்ளது.

சிறீலங்காவின் அண்மைக்கால இரணுவ வரலாற்றில் ஒவ்வொரு தோல்வியின் பின்பும் இராணுவக் கட்டமைப்பில் மாற்றமும், அதிகார மாற்றமும் வழமையானதொன்றாகவே மாறியுள்ளது. இதன் பிரகாரம் புதிய அமைப்புக்கள் உருவாக்கப்படுவதும், பின்னர் ஒரு தோல்வியின் பின்னர் அவை கலைக்கப்படுவதும், ஒரு அதிகாரியிடம் இருந்து மற்ற அதிகாரியிடம் அதிகாரங்கள் மாற்றப்படுவதும் நடைமுறையாக மாறியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் நான்கு தடவை இவ்வாறான அதிகார மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு தோல்வியின் பின்பும் இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்படுவது போன்று, விசாரணைக் கமிசன்கள் அமைக்கப்படுவதும் வழக்கமாகிவிட்டது. இது லெப். ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ உட்பட ஒன்பது அதிகாரிகள் கொல்லப்பட்ட அராலிக் கண்ணிவெடித் தாக்குதலில் இருந்து கட்டைக்காடு மினிமுகாம் தகர்ப்பு, மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு, ஒப்பரேசன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தோல்வி, பூநகரிப் படைத்தளம் தகர்ப்பு என நீண்டு கொண்டு செல்கின்றது.

ஆனால், இம்மாற்றங்கள், விசாரணைகள் எவையும் முன்னேற்றகரமாக எதையும் சாதிக்க உதவியதாக இல்லை. மாறாக, எனது தலைமையில் இவ்வளவு இராணுவத்தினரும் ஆயுதத் தளபாடமும் இழக்கப்பட்டது எனவும், எனது தலைமையில் இவ்வளவு இராணுவத்தினரும் இவ்வளவு ஆயுதத் தளபாடமும் இழக்கப்பட்டது எனவும் அதிகாரிகள் ஒப்பிட்டுப் பார்த்து குறைந்த தொகையில் உள்ளவர் பெருமை பேசிக்கொள்ளவே இது உதவியது.

இதனை நோக்கும் போது, சிறீலங்கா இராணுவத் தலைமைப் பீடமும் அரசாங்கமும் தோல்விக்கான காரணத்தைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அதாவது தோல்விக்கான காரணம் இராணுவக் கட்டமைப்பிலும், அதிகாரிகளின் திறமையின்மையிலும் இருப்பதைவிட, வேறு எங்கோ இருப்பதை அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

அதாவது, பிரிட்டனிடம் இருந்து சிறீலங்கா அரசியலமைப்பை இரவல் வாங்கியது போன்றே இராணுவக் கட்டமைப்பையும் இரவல் வாங்கிக் கொண்டது. அதன் பின்னர், கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையில் உலகப் புகழ் பெற்ற இஸ்ரேலிடம் இருந்து ஆலோசனையைப் பெற்றதோடு, அதற்கேற்ப இராணுவத்தைப் புனரமைத்துக் கொண்டது. அதாவது, உலகப் போர்களில் வெற்றிக்கு அடிகோலிய பிரிட்டனிடம் இராணுவக் கட்டமைப்பையும், அரபு நாடுகள் பலவற்றைத் தோற்கடித்ததோடு பாலஸ்தீன இயக்கத்தின் கெரில்லா நடவடிக்கைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த இஸ்ரேலின் ஆலோசனையையும் கொண்ட ஒரு சிறந்த இராணுவக் கட்டமைப்பையே சிறீலங்கா பெற்றுள்ளது. ஆகையினால், சிறீலங்கா சந்திக்கும் தோல்விகள் இராணுவக் கட்டமைப்பில் உள்ள தவறல்ல. எதிர்த்தரப்பில் உள்ளவர்களின் ஆற்றலும், அவர்களின் போராட்டத்தின் தார்மீக பலமுமே காரணமாகும்.

இந்த வகையில் நோக்கும்போது, இராணுவ ரீதியான வெற்றி என்பது இராணுவக் கட்டமைப்பு மாற்றத்தினாலும், விசாரணைக் கமிசனின் அறிக்கைகளினாலும் கிட்டிவிடப் போவதில்லை என்பதை சிறீலங்கா புரிந்துகொள்ளல் வேண்டும். அதாவது காலத்திற்குக் காலம் அதிகாரத்தை தலைக்குத் தலை மாற்றினாலும், இராணுவ வெற்றி சாத்தியமாகப் போவதில்லை. ஒரு சிறப்பான தலைமையைக் கொண்ட தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாக வெற்றிகொள்ள முடியாது என்பதை உலகம் ஏற்றுக்கொண்டதை சிறீலங்காவும் ஏற்றுக் கொண்டு இனப்பிரச்சினைக்கு மாற்றுவழி தேடுவதே சரியான வழி. ■




வெளிவந்துவிட்டது: கரும்புலிகள்
ஒலிப்பதிவு நாடாவும் C. D. யும்

# புலரும் புது விடியல்

அம்மா!
தன்னந் தனியாய் அடுக்களைக்குள்
புகையோடு நீயும் புகைந்தேபோனாய்.
உள்ளத்து ஆசைகளும்
உன் உணர்வுகளும்
எண்ணெய் போலவே உருகிவிட்டது.
அப்பாவின் அடிதாங்க முடியாமல்
விம்மிக் கொண்டிருப்பாய்
ஆனால், வெளியே சொல்லமாட்டாய்.
வேறு என்ன நீ செய்தாய்?
சின்ன வயதிலிருந்தே உன் அப்பாவுக்கும்
கட்டியபின் கணவனுக்கும்
பின் பெற்ற மகனுக்கும் முன்னால்
வாய்புதைத்து நிற்பாய்.
அம்மா,
சீதனச் சந்தையிலே
நீ விற்கப்படும்போது
பணம்தானே முதுகெலும்பாயிருந்தது.
ஒன்றுக்குப் பின் ஒன்றாய்
ஒன்பதைப் பெற்றுவிட்ட பின்பும்
ஓய்ந்திருக்க உன்னால் முடிந்ததா?
அன்று,
அந்நிய ஆதிக்கத்தின் பிடியில்
எம்மண் அகப்பட்டுத் தவிக்கையில்
சுற்றிவளைப்பில் சிக்குண்ட
அண்ணாவையும் அப்பாவையும் காணாது
விழிசிந்தி நிற்பாய்
சப்பாத்துச் சத்தங்கள் அருகில் கேட்டபோது
சேலைத்தலைப்பை இழுத்து மூடி
எங்களைத்தானே கவசமாக்கிக் கொள்வாய்.

திருமணங் குழம்பியதால்
அயல் வீட்டுமாமி
கிணற்றுக்குள் பாய்ந்து
தன்னுயிரை மாய்த்தாள்.
எனது அக்காவோ
முப்பத்தியைந்தைத்
தாண்டிய பின்பும்
தனியாகவே இருக்கிறாள்.
நீங்கள் பணிந்து சென்றபோதும்
ஏறி மிதித்தார்கள்.
இந்தநிலை எனக்கு வேண்டாமம்மா...
கைதூக்க மறந்தால்,
நானும் கரணமடிக்க வேண்டியதுதான்
இதோ... இப்போது
என்கையில கருவி.
இது ஒவ்வொரு முறையும்
சடசடக்கும் போது
எதிரி மட்டுமா
பொடியாகிப் போகிறான்?
சமுதாய அடக்குமுறையும் தானம்மா
அதோ எதிரி முகாம்!
எனது மண்ணிலே
எனது கடமையை
எனக்கு உணரவைக்கிறது.
இதோ துப்பாக்கி!
நான் துணிந்தவள் என்பதை நிரூபிக்கிறது.
அம்மா கலங்காதே.
உன் மகள் காலச்சூழலில்
அடித்துச் செல்லப்படமாட்டாள்.
அணியாகச் செல்கிறாள்.
எரி கொண்ட விழியோடு
களமாடுவாள்.
எதிரி எங்கள்
எல்லைவிட்டு நீங்கும் வரைக்கும்
அடக்குமுறை விலங்குகள்
உடைத்தெறியப்படுமட்டும்,
உயர்ந்த கரங்களின்
கருவிகள் வீழாது.
எங்கள் இரத்தச் சிவப்பில்
வானம் வெளுக்கும்.
இனிப் புலரும் புதுவிடியல்.

- உதயலட்சுமி




**U.T.O**
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

**L.T.T.E**
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

**T.C.C**
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
Tel 03-457 6347 F 5608224

**T.C.G**
Post Fach - 1132
52437 Linnich, Germany
Tel: 1714210302

**T.C.C**
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F 091-611 3179

**T.C.C**
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

**T.C.C**
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

**W.T.C.C**
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

**T.C.C**
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F 435 81191

**T.C.C**
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943

Printed by Observer Group Newspapers